REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜனவரி 28 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
1932 - 2022
நமோ நமோ தாயே
வரு. 91 இல. 24 | Saturday 28, January, 2023 | 14 பக்கங்கள்

## நாட்டின் சட்டத்தை நடைமுறைப்படுத்த நான் கட்டுப்பட்டுள்ளேன்

# 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் நீதியரசர் குழாமின் தீர்ப்புக்கமையவே

## அதிகாரங்களைப் பகிரத் தயாராகவே உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவிப்பு




### காணி ஆணைக்குழுவை ஸ்தாபித்து, தேசிய காணிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்

ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்துக்கமைய தற்போதுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தான் கட்டுப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்கமையவே 13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த கட்டுப்பட்டுள்ளதாகவும், இல்லையெனில், பாராளுமன்றத்திற்கூடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



மேலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினராலும் தனிப்பட்ட பிரேரணையை முன்வைக்க முடியுமெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லையெனில், அதனை நடைமுறைப்படுத்த நேரிடும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் (26) நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி இங்கு மேலும் கருத்து தெரிவித்ததாவது

நிறைவேற்று அதிகாரம் கொண்டவரென்ற அடிப்படையில் தற்போதுள்ள

06

---

03 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிப்பு

## பரீட்சை நடக்கும் காலத்தில் மின்சார துண்டிப்புக்கு அனுமதிக்க முடியாது

### மின்சார சபைக்கு ஆணைக்குழு வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை காலப்பகுதியில் தடையில்லாமல் மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்துமாறு கோரி பொது பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று மின்சார சபைக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றைய தினம் மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி கோரி மின்சார சபையின் பொது முகாமையாளர் பொது பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு வேண்டுகோள்

06

---

## வரி அதிகரிப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் பெப்ரவரியில்

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அதிகரிக்கப்பட்டுள்ள வரி மறு சீரமைப்பு மூலம் அரச வருமானத்திற்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் தொடர்பில் முறையான மதிப்பீடு ஒன்றை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன் பின்னரே வரி அதிகரிப்பு தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,


இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில்

06

---

## இலங்கையின் பொருளாதாரம் நிலைத்திருக்க இந்தியாவே காரணம்

### இந்திய ஆதரவு குறித்து தூதுவர் மிலிந்த மொரகொட



இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது இந்தியாவின் ஆதரவு, அண்டை நாடுகளுக்கிடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட த ஹிந்துக்கு தெரிவித்துள்ளார்.

இந்தியா, உரிய நேரத்தில் இலங்கைக்கு உதவியளித்து இலங்கையின் பொருளாதார உயிர் வாழ்தலை உறுதி செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் இலங்கைக்கான உதவியை உறுதிப்படுத்தியுள்ளதாக மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

06

---

## பாராளுமன்ற கூட்டத் தொடர் நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைப்பு

### புதிய கூட்டத்தொடர் பெப். 08ஆம் திகதி ஆரம்பம்

### ஜனாதிபதியின் செயலாளரினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை நேற்று (27) நள்ளிரவுடன் ஒத்திவைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.



அதற்கமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 08 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இக்கூட்டத்தொடர் முடிவடைந்து புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகும் சந்தர்ப்பத்தில் சம்பிரதாயப்படி ஜனாதிபதியினால் அக்கிராசன உரை நிகழ்த்தப்படும்.

அந்தவகையில் பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் அக்கிராசன உரையில் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக நாட்டில் அமுல்படுத்த தீர்மானித்திருக்கும் புதிய கொள்கைகள், புதிய சட்டங்கள், 2023 2048 வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர தினத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்றவாறு நாட்டின் முன்னேற்றத்திற்காக கட்சி, நிறம், இனம்,மத பேதமின்றி கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படும்.

---

## நீர்கொழும்பு கடல் மற்றும் களப்பில் 1,447 Kg பீடி இலை பொதிகள் மீட்பு



சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவர முயற்சித்த 1,447 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் நீர்கொழும்பு கடல் மற்றும் களப்பு பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 26 ஆம் திகதி நீர்கொழும்பு கடற்பரப்பிலும், களப்பு பகுதியிலும் கடற்படையினர் நடத்திய விசேட தேடுதல்

06

---

## கச்சதீவு ஆலய திருவிழாவுக்கு இம்முறை 8,000பேருக்கு அனுமதி

### 4,500 இலங்கையர், 3,500 இந்தியருக்கு அனுமதி



கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை 8,000 பேரின் பங்களிப்புடன் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

4,500 இலங்கை பக்தர்களும் 3,500 இந்திய பக்தர்களும் 1,000 அரச உத்தியோகத்தர்களும் பங்கேற்கக் கூடியவாறு இவ்வருட கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை நடத்துவதற்கு இலங்கை மற்றும் இந்திய தரப்புகளின் இணக்கத்துடன்

06

---

## மருந்துத் தட்டுப்பாடு குறித்து GMOA, WHO க்கு அவசர செய்தி

### அவசர நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்





இலங்கை எதிர்கொண்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலையிடவேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துப்பொருட்கள் உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தீர்வை வழங்கவேண்டுமென்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

06

---

## நீதிமன்றின் பிரதிவாதிகளின் கூண்டில் ஏற மறுத்த மைத்திரி

### நீதவானின் கண்டிப்பால் ஏறி சாட்சியமளிப்பு



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலான விசாரணை நேற்று நடைபெற்றவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதிவாதி கூண்டில் ஏற மறுத்த சம்பவத்தை கொழும்பு, கோட்டை நீதவான் திலின கமகே கண்டித்துள்ளார்.

இதனையடுத்தே அவர் பிரதிவாதி கூண்டில் ஏறியுள்ளாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

06

---

யாழ். நகரில் மீற்றர் வட்டிக்காரர் அட்டகாசம்

## பணத்தை வசூலிக்க அடித்து துன்புறுத்திய நபர் அதிரடி கைது

### தொடர்புடைய அனைவரையும் தராதரம் பாராமல் சட்டத்தின் முன் நிறுத்துமாறு வடக்கு ஆளுநர் பணிப்பு

**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ். நகரில், மீற்றர் வட்டிக்கு கொடுத்த பணத்துக்கான வட்டியை கொடுக்காத நபர்களை கடத்தி சித்திரவதை செய்து, அடித்து துன்புறுத்திய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவத்துடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கும் தொடர்புள்ளதாக தெரியவந்துள்ளது.

சுன்னாகம் பகுதியில் பட்டா ரக வாகனத்தால் வீதியில் பயணித்த காரை மோதி விபத்தை ஏற்படுத்தி, காரில் இருந்தவர்கள்

06

---



இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு முன்னெடுத்த

## ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு விசாரணை தொடரும்

ஆட்சேபனை மனு நீதிமன்றம் நேற்று நிராகரிப்பு

03

---



யாழ்.கோப்பாய் வெட்டிப் படுகொலை சம்பவம்

## கொல்லப்பட்டவரின் மனைவி, மாமனார் உட்பட 11 பேர் கைது

கூலிப்படை வைத்து கணவனை கொலை செய்தமை கண்டுபிடிப்பு

03

---

## அனுராதபுரத்தில் வீடொன்றில் திடீரென ஏற்பட்ட பாரிய தீ


### தாயும் 02 குழந்தைகளும் உடல் கருகி பலி, தந்தை படுகாயம்

**அனுராதபுர சுழற்சி நிருபர் மதுஷானி**

அனுராதபுரம், அலையபத்துவ, மஹா மன்கடவல பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் தீயில் கருகி பலியாகியுள்ளனர். அவர்களது சடலங்கள் நேற்று (27) காலை வீட்டின் அறையில் கண்டெடுக்கப்பட்டதாக அலையபத்துவ

06





---

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## ஜெனின் சுற்றிவளைப்புக்குப் பின்னர் காசாவில் இஸ்ரேல் வான் தாக்குதல்




மேற்குக் கரையின் ஜெனின் அகதி முகாமில் வயோதிபப் பெண் உட்பட 9 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்ற மறுநாளான நேற்று (27) முற்றுகையில் உள்ள காசா மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இஸ்ரேலிய போர் விமானங்கள் வெள்ளிக்கிழமை அதிகாலையில் குறைந்தது 13 தாக்குதல்களை நடத்தியுள்ளதோடு காசாவின் மத்திய பகுதியில் உள்ள அல் மகாசி அகதி முகாமும் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு காசா நகரான அல் சைதூன் பகுதி மற்றும் வடக்கு காசாவின் பைத் ஹனுன் பகுதியும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

இந்த விமானப் படைகளின் தாக்குதலுக்கு முன்னதாக இஸ்ரேல் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக ஊடகங்கள் மற்றும் பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழப்புகள் பற்றி உறுதி செய்யப்படாத நிலையில் நேற்று காலையாகும்போது அமைதி நிலை திரும்பியதாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் விபரித்துள்ளனர்.

2.1 மில்லியன் மக்கள் வாழும் உலகின் அதிக மக்கள் செறிவு கொண்ட பகுதிகளில் ஒன்றாக இருக்கும் காசாவில் இருந்து இரு ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்தே வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இரு ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்து தெற்கு காசாவில் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுள்ளது. எனினும் இந்த ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பினால் முறியடிக்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் ரொக்கெட் தாக்குதலுக்கு எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும், "பலஸ்தீன மக்கள் மற்றும் அவர்களின் புனிதத் தலங்களை பாதுகாக்கும் பணியை தொடர்ந்து மேற்கொள்வதாகவும் மக்களின் கேடயமாகவும் வாளாகவும் தொடர்ந்து இருப்பதாகவும்" காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் பேச்சாளர் ஹாசிம் கசம் தெரிவித்துள்ளார்.

ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேலியப் படை கடந்த வியாழனன்று (26) நடத்திய சுற்றிவளைப்பில் ஒன்பது பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்தே காசாவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் அதிக உயிரிழப்புகள் பதிவான சம்பவங்களில் ஒன்றாக கருதப்படும் இந்த சுற்றிவளைப்பின்போது மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதில் கொல்லப்பட்டவர்களில் மக்தா ஒபைத் என்ற வயோதிபப் பெண்ணும் உள்ளார். அவர் தனது வீட்டின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோதே சுடப்பட்டதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஜெனின் சுற்றிவளைப்பை படுகொலைச் செயல் என பலஸ்தீனர்கள் வர்ணித்துள்ளனர்.

இந்நிலையில் காசாவில் மீண்டும் மோதல் நிலை அதிகரிக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது. ஐந்து மாதங்களுக்கு முன்னர் காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 49 பேர் கொல்லப்பட்டனர்.

## கூடுதல் ஆயுதங்களை கேட்டு உக்ரைனிய அரசு கோரிக்கை



ரஷ்யாவுக்கு எதிரான போரில் கூடுதல் ஆயுதங்களுக்கு உக்ரைன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போர் விமானங்களும் நெடுந்தொலைவு ஏவுகணைகளும் தேவைப்படுவதாக உக்ரைன் கூறியது.

மேற்கத்திய நட்பு நாடுகள் குறைந்தது 150 கவச வாகனங்களைக் கொடுத்து உதவ உறுதியளித்துள்ளன. ஆனால் அவை போதாது என்றும், கூடுதல் ஆயுதங்கள் தேவை என்றும் உக்ரைன் கூறுகிறது.

மேலும், மேற்கத்திய நாடுகள் உறுதியளித்துள்ள கவச வாகனங்கள் வந்துசேர்வதற்கு மாதங்கள் ஆகலாம் என்றும் அது குறிப்பிட்டது.

ஸ்கை செய்தி நிறுவனத்திற்குப் பேட்டியளித்த உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, கவச வாகனங்கள் தாமதமாக வந்துசேரக்கூடும் என்று அஞ்சுவதாகத் தெரிவித்தார்.

பிரிட்டன் மார்ச் மாத இறுதியில் சலஞ்சர் கவச வாகனங்களை அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியுள்ளது. கனடாவும் உதவி செய்ய முன்வந்துள்ளது.

ஜெர்மானியத் தயாரிப்பான லெபார்ட் 2 ரகக் கவச வாகனங்களை வரும் வாரங்களில் அனுப்பி வைக்க விருப்பதாக அது கூறியது.

## உக்ரைனுக்கு ஐ.எம்.எப் 16 பில். டொலர் கடன்



சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) உக்ரைனுக்கு 16 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்குவது குறித்துப் பரிசீலித்து வருகிறது.

வரும் ஏப்ரல் முதல் உதவி நிதி சென்று சேரலாம் என்று ப்ளூம்பேர்க் நிறுவனம் கூறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவித் திட்டத்தைச் செயல்படுத்த பல நிபந்தனைகள் உள்ளன. முதலில் ஜி7 தொழில்வள நாடுகள் அதை அங்கீகரிக்க வேண்டும். அடுத்து உக்ரைன் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாண்டு உக்ரைனுக்குச் சுமார் 40 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன் தேவைப்படும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிடுகிறது.

உக்ரைனிய நிதி அமைச்சர் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 42 பில்லியன் அமெரிக்க டொலர் பற்றாக்குறை ஏற்படும் என்று கூறுகிறார்.

## அமெ. டொலருக்கு எதிராக பாக். நாணயத்தில் வீழ்ச்சி



சர்வதேச நாணய நிதியத்தின் கடனை எதிர்பார்க்கும் பாகிஸ்தான் பணப் பரிவர்த்தனை கட்டுப்பாட்டை தளர்த்தியதை அடுத்து பாகிஸ்தான் ரூபா அமெரிக்க டொருக்கு எதிராக பெரும் வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு பாகிஸ்தான் பெற்ற 6 பில்லியன் டொலர் கடனின் முக்கியமாக 1.1 பில்லியன் தவணையை விடுவிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

இந்த நிதியை விடுவிப்பதற்கு நிதி நிலை முறைப்படுத்தல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை அமெரிக்க டொலருக்கான பாகிஸ்தான் நாணயத்தின் பெறுமதி 230 ரூபாவாக பதிவானது. தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மணி நேரத்திற்குள் டொலர் ஒன்றுக்கு நிகராக பாகிஸ்தான் ரூபாவின் பெறுமதி 255 ஆக மேலும் சரிவை சந்தித்தது.

இந்நிலையில் அமெரிக்க டொலருக்கு எதிராக பாகிஸ்தான் நாணயத்தின் பெறுமதி 9.6 வீதம் சரிந்ததாக பாகிஸ்தான் மத்திய வங்கி தெரிவித்தது.

## கொவிட் அலை உச்சத்தை கடந்ததாக சீனா அறிவிப்பு



கொவிட் அலையின் உச்சத்தை சீனா கடந்துவிட்டதாக அறிவித்திருக்கும் அந்நாட்டு அரசு, நாள்தோறும் புதிய பாதிப்பு மற்றும் மருத்துவமனைகளில் கொரோனா பாதித்து உயிரிழந்தோரின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சுகாதாரத் துறை நிபுணர்கள் தரப்பிலோ, நிலவரமும், அந்நாட்டு அரசு அளிக்கும் புள்ளிவிபரமும் வேறுபடுவது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

சீன நாட்டின் நோய் கட்டுப்பாட்டு மையம் வெளியிட்டிருக்கும் தகவலில், நாட்டில் கொரோனா பாதித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை ஜனவரி முதல் வாரத்தில் உச்சத்தைத் தொட்டதாகவும், அதன்பின் பாதிப்பு குறைந்து வருவதாகவும் தற்போது 70 வீதமாகக் குறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வாரத்தில் கொரோனா பாதித்து மரணமடைவோரின் எண்ணிக்கையும் மிகக் கடுமையாக இருந்ததாகவும், அதன் பின்னர் குறைந்துவருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பு உச்ச நிலையைக் கடந்துவிட்டதாகவும், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாகவும் சீனா தெரிவித்திருந்தாலும் பெரும்பாலான சர்வதேச வல்லுநர்களோ, சீனாவின் புள்ளிவிபரங்கள் மிகவும் நம்பமுடியாதவை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## ஹெய்டியில் பொலிஸார் மக்களுடன் ஆர்ப்பாட்டம்



கரீபிய நாடான ஹெய்டியில் 14 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்களும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அங்கு அதிகரித்துவரும் வன்முறையை எதிர்த்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குண்டர் கும்பலைச் சேர்ந்தவர்கள் கடந்த புதனன்று (25) ஹெய்டியின் லியன் கோர்ட்டில் உள்ள பொலிஸ் தலைமையகத்தைத் தாக்கினர்.

அதில் அங்கிருந்த 14 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

குற்ற கும்பல்கள் பொதுமக்களைக் கடத்திப் பிணைத் தொகை கேட்பது ஹெய்டியில் வழக்கம். ஹெய்டியின் ஜனாதிபதியாக இருந்த ஜொவெனல் மோயிஸ் 2021ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவரது வீட்டிலேயே கொல்லப்பட்டார்.

அதனை அடுத்து ஹெய்டியில் பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியும் அதிகரித்துள்ளன.

## பூமிக்கு மிக அருகால் சிறு விண்கல் பயணம்



நிலவை விடவும் மிக நெருக்கமான தொலைவில் சிறிய விண்கல் ஒன்று நேற்று (27) பூமிக்கு மிகவும் அருகால் கடந்து சென்றது.

மினிபஸ் அளவான 2023 பி.யு. என்ற அந்த விண்கல் தென் அமெரிக்காவின் தெற்கு முனையால் 3,600 கி.மீ நெருங்கமாக பூமியை கடந்தது. இது செய்மதிகள் நிலைநிறுத்தப்பட்டுள்ள தொலைவை விடவும் நெருக்கமானதாகும்.

ஒரு வாரத்துக்கு முன்னரே இந்த விண்கல் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதனால் பூமிக்கு ஆபத்து இல்லை என உறுதி செய்யப்பட்டது. இந்த விண்கல் பூமியை தாக்கினாலும் அதன் பெரும்பகுதி வளிமண்டத்திலேயே அழிக்கப்பட்டுவிடும் என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமாக நாசா தெரிவித்தது.

## மாணவனின் துப்பாக்கி சூட்டுக்கு அதிபர் நீக்கம்



அமெரிக்காவின் வெர்ஜீனியா மாநிலத்தில் 6 வயதுச் சிறுவன் பாடசாலையில் ஆசிரியை மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தை ஒட்டி அந்தப் பாடசாலையின் அதிபர் நீக்கப்பட்டுள்ளார்.

25 வயது ஆசிரியை அபிகேல் சுவெர்னர் இம்மாத ஆரம்பத்தில் 6 வயது மாணவனால் நெஞ்சில் சுடப்பட்டார்.

அவர் மருத்துவமனையில் இருந்து இவ்வாரம் வெளியேறினார்.

பாடசாலை அமைந்திருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடுக்கப்போவதாக அவர் கூறியுள்ளார்.

6 வயது மாணவனிடம் துப்பாக்கி இருப்பதையும் அவன் பலரை மிரட்டிக் கொண்டிருப்பதையும் பலரும் தெரிவித்தபோதிலும் பாடசாலை நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அந்தச் சம்பவத்தை முற்றிலும் தவிர்த்திருக்க முடியும் என்று சுடப்பட்ட ஆசிரியரின் வழக்கறிஞர் கூறினார்.

## எகிப்தில் 4,300 ஆண்டுகள் பழைய மம்மி கண்டுபிடிப்பு



எகிப்தில் 4,300 ஆண்டுகளாகத் திறக்கப்படாத கல் சவப்பெட்டிக்குள் தங்க இலையால் மூடப்பட்ட மம்மி ஒன்றை கண்டுபிடித்ததாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த மம்மி ஹெகசெப்ஸ் என்ற ஆணினுடையது என்றும் எகிப்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைமையான அரசர் அல்லாத ஒருவரின் முழுமையான மம்மி என்றும் நம்பப்படுகிறது.

எகிப்து தலைநகர் கெய்ரோவின் தெற்காக உள்ள சக்காராவில் இருக்கும் இடுகாடு ஒன்றின் 15 மீற்றர் ஆழத்தில் இந்த மம்மி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனுடன் மேலும் இரண்டு சமாதிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதோடு அதில் ஒன்று 'ரகசிய காவலர்' உடையதாகும்.

இதில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மம்மி சுண்ணாம்புக் கல் சவப்பெட்டியில் மூடப்பட்டு சுண்ணாம்புக் கலவையால் முத்திரையிடப்பட்டுள்ளது. "இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழையதும் முழுமையானதுமான மம்மியாக இது இருக்கக் கூடும்" என்று எகிப்தின் முன்னாள் தொல்பொருள் அமைச்சர் சாஹி ஹாவாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சக்கார பண்டைய எகிப்தில் 3,000 ஆண்டுகளுக்கு மேல் இடுகாடாக இருந்திருப்பதோடு, தற்போது யுனெஸ்கோ மரபுரிமைத் தளமாக உள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஜனவரி 28 சனிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 05.10
லுஹர் - 12.24
அஸர் - 03.47
மஃரிப் - 06.18
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் தை 14
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



மறுசீரமைப்புக்களை விரைவுபடுத்துவதற்கான

# அரசியல் அபிலாஷைகள் பாராட்டப்பட வேண்டும்

## IMF நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சுப்பிரமணியன்



பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதற்கும், கடினமான காலங்களில் வரி அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கும், இலங்கைத் தலைமைத்துவம் காட்டிய, அரசியல் முனைப்பு மிகவும் பாராட்டத்தக்கதென சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் கூறினார்.

கொழும்பில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்த கலாநிதி சுப்பிரமணியன், இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரணப் பொதியின் மூலம் பூர்த்தி செய்ய வேண்டிய அனைத்துத் தேவைகளையும் இலங்கை பூர்த்தி செய்துள்ளதாகவும், பிரதான கடன் வழங்கும் நாடுகளின் உறுதிப்படுத்தல்களின் பின்னர் உரியசெயற்பாடுகள் நிறைவுபெறும் எனவும் கூறினார்.

முன்னெப்போதுமில்லாத வகையில் நாடு எதிர்கொள்ளும், பொருளாதார

06

சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

# உற்பத்தி தடைப்படுவதை தவிர்க்க அரசும், அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும்



பொருளாதார நெருக்கடியில் நாம் வலு சக்தி பயன்பாட்டை சீரான முறையில் பேணுவதோடு சம்பிரதாய வலு சக்தி உற்பத்தியில் இருந்து விடுப்பட்டு சூழலுக்கு தீங்கில்லாத மீள்புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.இலங்கையில் இன்றைய நிலையில் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் இதற்கு தீர்வை தருமாறு அரசுக்கு கோரிக்கை விடுப்பதாக சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அசங்க தென்னகோன் தெரிவித்தார்.

கிரேன்ட் ஒரியன்டல் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பெசிய அவர்..

எதிர்காலத்தில் இத்துறையை அபிவிருத்து செய்யக் கூடிய பணப்பலம் இல்லாமல் வீழ்ச்சியை நோக்கி போய்க் கொண்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.சில மின்னுற்பத்தி நிறுவனங்ளை மூடி விடும் நிலைமைக்கு அ தன் உரிமையாளர்கள் த ள்ளப்பட்டுள்ளனர்.எமது சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்களில் ஒரு நாளைக்கு கிகாவோட் 3க்கு மேல் உற்பத்தி செய்யக்கூடிய 800 மெகாவோடுக்கு மேற்பட்ட கட்டமைப்பு எம்மிடம் இருக்கிறது. அத்தோடு தேசிய மின்சார கட்டமைப்பில் நாம் 7.5% வீத மின்சாரத்தை பூர்த்தி செய்கிறோம்.ஆனால் டீசல்,அனல் மின் உற்பத்திக்கு நாம் அதிக பணம் செலுத்தி மின்சாரத்தை வாங்க வேண்டியுள்ளது.நாம் அதைவிட குறைவான விலைக்கே மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கிறோம்.

இலங்கை தேசிய மின்கட்டமைப்புக்கு புதுபிக்கத்தக்க வலு சக்தி வருடத்திற்கு 15%16% வீத பங்களிப்பை வழங்கி வருகிறது. இன்றைய நிலையில் சிறு மின்னுற்பத்தி நிலையங்களில் 7000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.இவற்றுக்கான பராமரிப்பு வேலைகளை செய்ய முடியாத சூழ்நிலைக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.நாம் இன்று முகம் கொடுக்கும் சில் பிரச்சினைகளால் எமது

06

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு முன்னெடுத்த

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு விசாரணை தொடரும்

## ஆட்சேபனை மனு நேற்று நிராகரிப்பு



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முன்னெடுத்துச் செல்வதை தடுக்கும் வகையில் பிரதிவாதிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு தடையில்லையென தெரிவித்த நீதிபதி, மே10ஆம் திகதி விசாரணை நடைபெறுமென்றும், சாட்சிகளை அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுத்துள்ளார்.

வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் சதொச ஊழியர்களை அவர்களது கடமைகளிலிருந்து விலக்கி அரசியல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தியதாக தெரிவித்து முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

யாழ்.கோப்பாய் வெட்டிப் படுகொலை சம்பவம்

# கொல்லப்பட்டவரின் மனைவி, மாமனார் உட்பட 11 பேர் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ். கோப்பாய் பகுதியில் குடும்பத் தலைவரை வெட்டிப் படுகொலை செய்த குற்றச்சாட்டில், அவரது மனைவி, மனைவியின் தந்தை உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் மத்தி பகுதியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையமொன்றை நடத்தி வந்த ஒரு பிள்ளையின் தந்தையான அஜித் என்பவர் கடந்த 21ஆம் திகதி இரவு கராஜிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த கும்பலொன்று வழிமறித்து தாக்கி

### கூலிப்படை வைத்து கணவனை கொலை செய்தமை கண்டுபிடிப்பு

படுகொலை செய்ய முயற்சித்தது.

அவர்களிடமிருந்து தப்பியோடிய போதும், அவரை வீடு வரை துரத்திச் சென்று, வீட்டு வாசலில் வைத்து மூர்க்கத்தனமாக வெட்டிப் படுகொலை செய்தனர்.

இப் படுகொலை சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரினால், நடத்தப்பட்ட விசாரணைகளின்படி, கொலை செய்யப்பட்ட நபரின் குடும்பத்தில் முரண்பாடுகள் நிலவி வந்ததாகவும், அதனால் அவர்

06

# கம்பளை குருந்துவத்தயிலுள்ள தேயிலை தொழிற்சாலையில் தீ

## 02 பேருக்கு காயம், தொழிற்சாலை முற்றாக நாசம்

கம்பளை நிருபர்



கம்பளை, குருந்துவத்தையிலுள்ள தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியதுடன் இருவர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தேயிலை தொழிற்சாலை தீப்பற்றி எரிவதாக குருந்துவத்தை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன் கண்டி தீயணைப்பு பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேயிலைத் தொழிற்சாலையின் உரிமையாளரின் மகனும் தொழிலாளி ஒருவரும் தீ காயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தில் சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# BOI யின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற விசேட குழுவில் ஆராய்வு



இலங்கை முதலீட்டுச் சபையின் எதிர்காலத் திட்டங்கள், செயற்பாடுகள், இனங் காணப்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் முதலீடு செய்ய எதிர்பார்க்கப்படும் துறைகள் தொடர்பிலான முன்வைப்பு (Presentation) இலங்கையின் வணிகத் தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் கலந்துரையாடப் பட்டது.

'இலங்கையின் வணிகத் தொழில் முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு' அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மதுர விதானகே தலைமையில் (26) பாராளுமன்றத்தில் கூடிய போதே இது தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

இலங்கை முதலீட்டு சபை, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, வனப்பாதுகாப்புத் திணைக்களம், சுற்றுலா அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, நீதி அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு உள்ளிட்ட பல துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அதிகாரிகள் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதற்கமைய, இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பது தொடர்பில் காணப்படும் பிரயோக ரீதியான சிக்கல்கள்

06

# தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள்; நூல் வெளியீட்டு விழா



தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள் என்ற இந்திய, இலங்கை தமிழிசை பாடல்களை உருவாக்கியவர்களின் சிறு குறிப்பும் பாடல்களும் கொண்ட தொகுப்பு நூலொன்றை திருமதி சுபா ஷாமினி கந்தசாமி, ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் இன்று (28.01.2023) சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடவுள்ளார்கள். பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கொழும்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச்செயலாளர் வே. கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறும் இந் நிகழ்வில், தமிழ் வாழ்த்தினை செல்விகளான பிருந்தா ரவிதாஸ், சுபலஷிகா கேசவன் ரெட்டியார், சங்கரிப்ரியா தேவபிரகாசம், கபிலாஷினி நந்தகுமார் ஆகியோர் இசைப்பர். வரவேற்புரையை சட்டத்தரணி விநோதன் நிகழ்த்த, தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், வாழ்த்துரையினை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் நிகழ்த்துவார்.

06

# உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஏற்பாட்டில் மலேசியாவில் சர்வதேச MSME B2B மாநாடு



உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஏற்பாட்டில், எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் சர்வதேச சிறு குறுந் தொழில் முனைவோர் மாநாடு (International MSME B2B MEET) மலேசியாவில் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு இந்திய சிறு குறுந்தொழில் அமைச்சினதும், மலேசிய சிறு குறுந்தொழில் அமைச்சினதும் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பல்வேறு நாடுகளிலுள்ள தமிழர் அனைவரையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் Ct : J. செல்வகுமார் கேட்டுக் கொண்டுள்ளார். தொடர்புகளுக்கு,(W +60166167708) +9172999 92999 / msmeb2bmeet@gmail.com





கட்டார் நாட்டிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணிகளை அழைத்து வரும் திட்டத்தின் முதல் கட்டமாக கட்டார் நாட்டிலுள்ள 'தௌபீக் ட்ரவல்' (Tawfeek Travel) நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைத்திடும் நிகழ்வு நேற்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தலைமையில் நடைபெற்றது.நிகழ்வில் கட்டார் 'Tawfeek Travel' நிறுவனத்தின் CEO ரெஹான் மஜித் அலியும் இராஜாங் அமைச்சர் டயனா கமகே ஆகியோர் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது.

படங்கள்: விமல் கருணாரத்த

# கோழிப் பண்ணையிலிருந்து 240 கோழிகள் திருட்டு

ஹதரலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்வத்த பிரதேசத்திலுள்ள கோழிப் பண்ணையிலிருந்து 240 கோழிகள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் ஹதரலியத்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கோழிப் பண்ணைக்குள் நுழைந்த சிலர், பண்ணையின் கூடுகளை வெட்டி அகற்றிய பின்னர், கோழிகளைத் திருடிச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

திருட்டு சம்பவம் இடம்பெற்ற போது, பண்ணையில் 2000 கோழிகள் காணப்பட்டதாகவும் பண்ணையின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 254.07 | 265.58 |
| கனடியன் டொலர் | 268.14 | 280.01 |
| யூரோ | 390.58 | 406.29 |
| ஜப்பான் யென் | 2.7486 | 2.8611 |
| சிங்கப்பூர் டொலர் | 271.58 | 283.05 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 442.29 | 459.11 |
| சுவிஸ் பிராங்க் | 387.33 | 405.99 |
| அமெரிக்க டொலர் | 360.49 | 371.39 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.57 | கட்டார் ரியால் | 99.10 |
| குவைத் டினார் | 1,186.32 | சவூதி ரியால் | 96.46 |
| ஓமான் ரியால் | 940.62 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.59 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 05


### குறள் தரும் சிந்தனை

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்

*ஊக்கமில்லாதவர் உதவியாளராக இருப்பதற்கும், ஒரு பேடி, கையிலே வாள்தூக்கி வீசுவதற்கும் வேறுபாடு ஒன்றுமில்லை.*

# இலங்கையின் வளர்ச்சியில் பிரதான பங்காளி இந்தியா

'இலங்கையின் வளர்ச்சியில் பல்வேறு வழிகளிலும் இந்தியா பங்காளியாக இருந்து வருகிறது' என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் 74வது குடியரசு தின வைபவம் இலங்கைக்கான தூதுவர் கோபால் பாக்லே தலைமையில் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

சபாநாயகர் குறிப்பிடுவது போன்று இலங்கையின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இந்தியா உண்மையான பங்களாராக இருந்து வருகிறது. இதில் மாற்றுக்கருத்து இடமில்லை.

இலங்கையானது இந்தியாவின் மிக நெருங்கிய அயல்நாடாகும். இரு நாடுகளுக்கும் இடையில் ஆரம்ப காலம் முதல் சமூக, சமய, கலாசார. பொருளாதார தொடர்பாடலும் நட்புறவும் நீடித்து நிலவி வருகிறது.

இரு நாடுகளும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுமார் ஆறு மாத கால இடைவெளியில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டன. அதனைத் தொடர்ந்த குறுகிய காலப்பகுதிக்குள் இராஜதந்திர உறவையும் இருநாடுகளும் ஆரம்பித்துக் கொண்டன. அந்த உறவுக்கும் 75 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

இக்காலப்பகுதியிலும் இரு நாடுகளிக்கிடையிலான நட்புறவும் நெருக்கமான தொடர்பாடலும் மேலும் வலுப்பெற்று வளர்ச்சி அடைந்துள்ளன. குறிப்பாக இலங்கை சமூக, பொருளாதார ரீதியில் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்கும் ஒவ்வொரு சந்தப்பர்த்திலும் முதலில் உதவி, ஒத்துழைப்பு நல்கும் நாடாக இந்தியாக இருந்து வருகிறது. அந்த வகையில் கடந்த வருடம் (2022) இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. நாடும் மக்களும் பல்வேறு விதமான அசௌகரியங்களையும் பாதிப்புகளையும் எதிர்கொண்டனர்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையுடன் ஆரம்பமான இப்பொருளாதார நெருக்கடி எரிபொருள், எரிவாயு நெருக்கடி அடங்கலாக எல்லா மட்டங்களிலும் தாக்கங்களுக்கு வித்திட்டது. இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு இந்நாடு முன்னொரு போதும் முகம் கொடுக்கவில்லை.

இருந்தும் கூட, இந்நெருக்கடிச் சூழலிலும் இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்க இந்தியா தவறவில்லை. குறிப்பாக இந்நெருக்கடி தோற்றம் பெற்றதும், முதலில் உதவிக்கு வந்த நாடாக இந்தியா விளங்குகிறது. இலங்கையின் அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிப்பதற்குத் தேவையான நிதி உதவியை வழங்குவதோடு இந்த ஒத்துழைப்பு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து பெற்றோல், டீசல் என எரிபொருள் உட்பட பல்வேறு உதவிகளையும் கடந்த வருடத்தின் முதல் ஆறு ஏழு மாதங்களிலும் இந்தியா வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பின்னணியில் இந்தியா கடந்த வருடத்தில் மாத்திரம் 04 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கடன் மற்றும் உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அத்தோடு இந்நாட்டுக்குத் தேவையான பசளை உள்ளிட்ட ஏனைய பல உதவிகளையும்கூட அந்நாடு வழங்கத் தவறவில்லை.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் இலங்கை ஈடுபட்டுள்ளது. இம்முயற்சிகளுக்கு உதவி அளிக்கும் வகையில் கடன் மறுசீரமைப்புக்கு இணங்குவதாக சர்வதேச நாணய நிதியத்திற்கு எழுத்து மூலம் இந்தியா அறிவித்து இருக்கிறது.

இந்தியாவின் உதவி ஒத்துழைப்புக்கள், இந்நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களையும் அழுத்தங்களையும் பலவீனப்படுத்தப் பெரிதும் உதவியுள்ளன. 'அயல் நாடு முதலில்' என்ற கொள்கைக்கு அமைய, இந்தியா இலங்கைக்கு அளித்துவரும் உதவி ஒத்துழைப்புக்கள் இந்நாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதித்து விட்டன.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், 'இலங்கையின் எரிசக்தி, சுற்றுலா மற்றும் உட்கட்டமைப்பு துறைகளில் இந்தியா முதலீடுகளை ஊக்குவிக்கும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முதலீடுகளும் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு பக்க துணையாக அமையும். இந்நாட்டின் பல துறைகளிலும் இந்தியா ஏற்கனவே முதலீடுகளை மேற்கொண்டிருக்கின்றது. இம்முதலீடுகளும் இந்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு பெரிதும் உதவியுள்ளன. இந்த உதவி, ஒத்துழைப்புக்களின் நிமித்தம் இந்நாடும் மக்களும் இந்தியாவுக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக உள்ளனர்.

ஆகவே இந்நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இந்தியா பாரிய பங்களிப்பை நல்கி வருகின்றது. அந்த உதவி, ஒத்துழைப்புக்கள், இலங்கை வளர்ச்சியின் பிரதான பங்காளர் என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு பெற்றுக்கொடுத்துள்ளது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது என்பது தான் பொருளாதார வல்லுநர்களதும் கருத்தும் கூட.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவை விட இலங்கையில்தான் கலைகள் மீது ஆர்வம் அதிகம்!

## நடனக் கலைஞர் சிதம்பரம் சுரேஷ் கருத்து

இந்தியாவில் கலை பிறந்து இருக்கலாம். ஆனால் இலங்கையில் தான் கலை ஆர்வம் மிகவும் கூடுதலாக இருக்கிறது.

இவ்வாறு அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த பிரபல நடனக் கலைஞர் சிதம்பரம் ஆர். சுரேஷ் தெரிவித்தார்.

அவருடன் அவரின் மனைவி நடன நர்த்தகி ஷோபனா சுரேஷ் அவர்களும் வருகை தந்திருந்தார் .

காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நடனத்துறை காரைதீவு மாணவி ஜெயகோபன் தக்சாளினியின் அழைப்பை ஏற்று இக்கலைக்குடும்பத்தினர் வருகை தந்தனர்.

அங்கு அவர்கள் சுவாமி விபுலானந்தர் பிறந்த இல்லத்தையும் அரும்பொருள் காட்சியகத்தையும் பார்வையிட்டனர். பின்னர் மணிமண்டபத்தில் விபுலானந்த நாட்டிய நிருத்திய மாணவிகளுக்கு பயிற்சிகள் இடம்பெற்றது.

அந்நிகழ்ச்சி மணிமண்டப முன்னாள் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது. நடனக் கலைஞர் சிதம்பரம் ஆர். சுரேஷ் அவர் மேலும் பேசுகையில் சுவாமி விபுலாநந்தர் பிறந்த இல்லத்தை பார்க்கக் கிடைத்ததை ஒரு பாக்கியமாக கருதுகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களை விட இலங்கையில் உள்ள மாணவர்கள் கலையில் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். எனக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் நிறைய நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் பல கலைப்பள்ளிகளை நடத்தி வருகின்றார்கள். நான் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்றவன். சிதம்பரம் நடராஜர் ஆலயம் சிறப்பானது. பரதநாட்டியத்தில் அரைமண்டி முழு மண்டி முக்கியமானது இதை இன்று உங்களுக்கு சொல்கின்றேன்" என்றார். மாணவருக்கு பயிற்சி வழங்கிய சுரேஷ் தம்பதிகளை மணிமண்டப முன்னாள்தலைவர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் நடன ஆசிரியை திருமதி ஷர்மிளா சுதாகரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். பல்கலைக்கழக மாணவி ஜெயகோபன் தக்சாளினி அவர்களுக்கு கலைப்பரிசைக் கையளித்தார்.



அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று தனக்கான ஒரு அங்கீகாரத்தை பெற்ற விரல் விட்டு எண்ணக்கூடிய ஆண் நடன கலைஞர்களுள் ஒருவர் சுரேஷ். அவுஸ்ரேலியா நாட்டில் சமர்பணா நாட்டிய பள்ளியை நடத்தி வருபவர். அவரும் அவரது மனைவியாரும் சிறந்த நாட்டிய கலைஞர்களாவர்.

சுரேஷ் நடனக்கலை உடன் சிலம்பு கலையிலும் சிறந்தவர். அண்மையில் நடனத்திற்கு முக்கியமானது தாளம். அதனை விளக்கி 108 பரதநாட்டிய ஜதிகள் எனும் நூலை தமிழ் , ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட்டவர். ஒன்லைன் இலும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை தன் வசம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.





காரைதீவு குறூப் நிருபர்...

# யூனியன் அஷ்யூரன்ஸ் ஊழியர்களுக்கான வருட இறுதி கொண்டாட்ட நிகழ்வு வெற்றிகரமாக முன்னெடுப்பு

யூனியன் அஷ்யூரன்ஸின் ஊழியர்களுக்கான வருட இறுதி கொண்டாட்ட நிகழ்வு Shine Like a Diamond எனும் தலைப்பில் அண்மையில் கொழும்பு BMICH இல் இடம்பெற்றது. இந்நிகழ்வில், யூனியன் அஷ்யூரன்ஸ் குடும்பத்தார் அனைவரும் கலந்து கொண்டு, மனம் மறவாத இனிய மாலைப் பொழுதை அனுபவித்திருந்தனர்.

கடந்த ஆண்டுகளில் யூனியன் அஷ்யூரன்ஸ் ஊழியர்களின் சிறந்த செயற்பாடுகளை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் பாராட்டியிருந்ததுடன், அதற்காக இந்நிகழ்வுக்கு ‘Shine Like a Diamond’எனும் நாமமும் சூட்டப்பட்டிருந்தது. சவால்கள் நிறைந்த ஆண்டில் இயங்கிய போதிலும் அணியினரால் சிறந்த வினைத்திறன் வெளிப்படுத்தப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் கருத்துத் தெரிவிக்கையில், “எமது சம்பியன்களால் யூனியன் அஷ்யூரன்ஸ் கீர்த்தி நாமம் உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தில் பல குறிப்பிடப்பட வேண்டிய சாதனைகளை பதிவு செய்துள்ளனர். அவர்களின் வினைத்திறனான செயற்பாடுகள் தொடர்பில் நான் மிகவும் பெருமை கொள்கின்றேன்” என்றார்.



யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் அனீஃவ் கருத்துத் தெரிவிக்கையில், “அதன் பிரத்தியேகமான அம்சங்களின் காரணமாக, நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பெறுமதியை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் இந்த வருடாந்த கொண்டாட்ட நிகழ்வு அமைந்துள்ளது. கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் பல வேளைகளில் இருப்பிடத்திலிருந்து பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதால் நீண்ட இடைவேளைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததால், இந்த நிகழ்வு விசேடமானதாக அமைந்திருந்தது” என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “யூனியன் அஷ்யூரன்ஸ் வெற்றியீட்டும் நிறுவனமாகும். நிறுவனத்தின் ஊழியர்கள் கொண்டிருக்கும் முழுத்திறனை அவர்களால் உணரக்கூடியதாக இருக்கும். நிறுவனம் தனது ஊழியர்களை பெறுமதியாக நடத்துவதுடன், பல்வேறு வழிகளில் வெகுமதியளிக்கின்றது. பயிலல் மற்றும் தம்மை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்குவதாக அமைந்துள்ளது. நேர்த்தியான பணிவாழ்க்கை சமநிலைக்காக, ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கம் போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது” என்றார். 25 வருடங்களாக நிறுவனத்தில் நீண்ட கால சேவைகளை வழங்கும் 26 ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை இந்த நிகழ்வின் பிரதான அங்கமாக அமைந்திருந்தது.

இதனூடாக நிறுவனம் தனது ஊழியர்களுடன் உறுதியான பிணைப்பையும், ஒன்றிணைவையும் மற்றும் நோக்கத்தையும் பகிர்ந்துள்ளது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நெருக்கடியான காலப்பகுதியில் ஊழியர்கள் ஆற்றியிருந்த பங்களிப்புக்காக இந்த மாலைப் பொழுது சிறந்த இசை நிகழ்வுகளுடன் களிப்பூட்டும் செயற்பாடுகளைக் கொண்டு மகிழ்விக்கும் வகையில் அமைந்திருந்தது.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 16.6 பில்லியனைக் கொண்டுள்ளது. ஆயுள் நிதியமாக ரூ. 54.7 பில்லியனையும், 2022 செப்டெம்பர் மாதமளவில் கொண்டிருந்தது.

இலங்கையர்களின் கனவுக்கு வலுசேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 4000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

# இலங்கையில் தொடர்ச்சியாக 7வது காலாண்டாக வேகமாக வளர்ந்து வரும் நிறுவனமாக அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ்

2021ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 7வது காலாண்டாக, இலங்கையில் மிக வேகமாக வளர்ந்து வரும் காப்புறுதி நிறுவனமாக அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் பிஎல்சி தனது அந்தஸ்தையும், ஸ்தானத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. நிறுவனம் தனது 2022, 3 வது காலாண்டின் நிதியியல் பெறுபேறுகளை சமீபத்தில் பொதுவெளியில் வெளியிட்டபோது இது வெளிப்பட்டுள்ளது. அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் பிஎல்சி 2022 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் 46% வருமான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன், அதன் வருமானம் ரூபா 2.547 பில்லியனாக உயர்ந்துள்ளது. வருமானத்தின் வளர்ச்சி, மோட்டார் அல்லாத மற்றும் மோட்டார் காப்புறுதிப் பிரிவுகளின் வளர்ச்சியுடன், தொழில்துறை சராசரியை விடவும் கணிசமான அளவில் அதிகமாக இருந்தது.



ரஜித ஒபேசேகர
ஷெஹான் ஃபைசால்

3 வது காலாண்டைப் பொறுத்தவரையில், அண்மைக்காலங்களில் எட்டப்பட்ட வளர்ச்சியை பகுப்பாய்வு செய்து ஒப்பிடுகையில், அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் வேகமான வளர்ச்சியை இக்காலாண்டு நிரூபிக்கிறது. 2020 ஐ விட 2021 இன் 3 வது காலாண்டின் வளர்ச்சி 26% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது, அதே நேரத்தில் 2022 இன் 3 வது காலாண்டு 2021 ஐ விட 46% ஆக அதிகரித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குள் நிறுவனம் 72% ஒட்டு மொத்த வளர்ச்சியை அடைய முடிந்துள்ளது என்பதை இது நிரூபிப்பதுடன், இது ஒரு அபரிமிதமான சாதனையாகும்.

நிறுவனத்தின் நிதியியல் பெறுபேற்றுத்திறன் குறித்து, பிரதம நிறைவேற்று அதிகாரியான, ஷெஹான் ஃபைசால் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், “பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் என எம்முடன் தொடர்புபட்ட தரப்பினர் அனைவருக்கும் மிகச்சிறந்த மதிப்பை வழங்கும் பயணத்தில் நாம் காலடியெடுத்து வைத்துள்ளதுடன், இந்த வாக்குறுதியை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம் ” என்று குறிப்பிட்டார்.

அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் பிஎல்சியின் நிறுவன வர்த்தக மூலோபாயத்தின் தலைமை அதிகாரியான ரஜித ஒபேசேகர அவர்கள் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “எமது வெற்றியின் தாரகமந்திரமானது அபரிமிதமான வளர்ச்சி வேகத்தை வழங்குவதாகும், இது குறுகிய முதல் நடுத்தர காலப்பகுதி வரை நீடித்து நிலைபெற்றுள்ளது. 2023 ஆம் ஆண்டிலும், எங்களின் வீச்சினை மேலும் விரிவுபடுத்தவும், இந்த வளர்ச்சி வேகத்திற்கு உதவவும் உறுதியான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட முயற்சிகள் எங்கள் வசம் உள்ளன. எங்கள் வெளிப்படைக் கோட்பாடு மற்றும் எங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தொடர்ச்சியான செயல்பாடும், அதாவது, சரியான நேரத்தில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் எங்கள் வணிகத்திற்கும் பரஸ்பரம் நன்மையளிக்கும் நியாயமான மற்றும் வெளிப்படையான கொள்கைகள் பேணப்பட்டு வருகின்றன” என்று குறிப்பிட்டார்.

# பழம்பெரும் நடிகை ஜமுனா காலமானார்

மிஸ்ஸியம்மா, தெனாலி ராமன், தூங்காதே தம்பி தூங்காதே உள்ளிட்ட பல படங்களில் நடித்த பழம்பெரும் நடிகை ஜமுனா வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார். அவருக்கு வயது 86. தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி மொழிப் படங்களில் நடித்து ஏராளமான ரசிகர்களை கவர்ந்தவர் நடிகை ஜமுனா.

1953ம் ஆண்டு தெலுங்கில் வெளியான புட்டிலு படத்தின் மூலம் 16 வயதில் நடிக்கத் தொடங்கியவர் நடிகை ஜமுனா. நடிகை, இயக்குநர், தயாரிப்பாளர் மற்றும் அரசியல்வாதி என பன்முகத் தன்மை கொண்டு விளங்கிய நடிகை ஜமுனாவின் மறைவு திரையுலகை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

நடிகை சாவித்திரி அழைத்ததால் சினிமாவுக்கு வந்தவர் நடிகை ஜமுனா. தெலுங்கில் வெளியான புட்டிலு படத்தின் மூலம் அறிமுகமான இவர் தமிழில் 1954ம் ஆண்டு ‘பணம் படுத்தும் பாடு’ படத்தின் மூலம் அறிமுகமானார். வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் கடந்த சில மாதங்களாக அவதிப்பட்டு வந்த நடிகை ஜமுனா நேற்று அவரது இல்லத்தில் காலமானார்.



தெலுங்கில் நடிகையாக 16 வயதில் நடிக்கத் தொடங்கிய ஜமூனா தமிழ், கன்னடம் மற்றும் இந்தி மொழிகளில் நடித்து அசத்தியவர். தமிழில் கடைசியாக கமல்ஹாசனின் ‘தூங்காதே தம்பி தூங்காதே’ படத்தில் நடித்திருந்தார் ஜமுனா.

தெலுங்கில் ரங்காராவ், நாகேஸ்வரராவ் என முன்னணி நடிகர்களுடன் நடித்த ஜமுனா தமிழில் சிவாஜி கணேசனுடன் ‘தங்கமலை ரகசியம்’ எம்ஜிஆர் உடன் ‘தாய் மகளுக்கு கட்டிய தாலி’ உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். ‘குழந்தையும் தெய்வமும்’ உள்ளிட்ட படங்கள் இவருக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்தன.

# தேசிய புத்தகக் கண்காட்சி காயல்பட்டினத்தில் ஆரம்பம்



இந்தியா புதுடெல்லி நேஷனல் புக் ட்ரஸ்ட், தூத்துக்குடி மாவட்ட நூலக ஆணைக்குழு, காயல்பட்டினம் அரசு கிளை நூலக வாசகர் வட்டம், காயல் இலக்கிய முற்றம், திருநெல்வேலி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த 37 ஆவது தேசிய புத்தகக் கண்காட்சி காயல்பட்டினம் பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள அரசு நூலகத்தில் (23) திங்கட்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 05ஆம் திகதி வரை மொத்தம் 14 நாட்கள் நடைபெறவுள்ள இக்கண்காட்சியை, காயல்பட்டினம் வரலாற்று ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் காயல் எஸ்.ஈ. அமானுல்லாஹ் திறந்து வைத்து, முதல் விற்பனையைத் தொடக்கி வைத்தார்.













பியர்ள் கார்டன் ரிஸார்ட் மேலாண்மை இயக்குநரும், காயல்பட்டினம் வரலாற்று ஆய்வுமையத்தின் ஒருங்கிணைப்பாளருமான கே.எம்.ஏ. அஹ்மது முஹிய்யத்தீன் இத்திறப்புவிழா நிகழ்ச்சிக்கு தலைமையேற்று, முதல் விற்பனையைப் பெற்றுக் கொண்டார்.

அல்அமீன் பள்ளியின் முதல்வர் முன்னிலை எம்.ஏ. புகாரி, சென்ட்ரல் மேநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பீ. செய்யது அப்துல் காதர், சென்ட்ரல் மெட்ரிக் மேநிலைப் பள்ளியின் முதல்வர் திருமதி எம்.செண்பகவள்ளி, எல்.கே. மேல்நிலைப் பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர் கே.எம்.ஐ. செய்யது முஹைதீன் ஆகியோர் முன்னிலையில் வகித்த இந்நிகழ்வில், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் மதுரை மண்டல மேலாளர் ஏ. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர் சங்க மாவட்ட துணைத் தலைவர் திருமதி பா. பேச்சியம்மாள், திருச்செந்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கி.எப்ரேம், குலசை ஹஸனிய்யா நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி எம்.முகைதீன் பீவி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மதுரை கிளை மேலாளர் மகேந்திரன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் திருநெல்வேலி கிளை மேலாளர் பூர்ணா ஏசுதாஸ், நெடுஞ்சாலை துறை ஏ. இத்ரீஸ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு பங்கேற்பாளர்களாக பங்கேற்றனர்.

வாசகர் வட்ட துணைத் தலைவரும் நிகழ்ச்சி மற்றும் கண்காட்சி ஒருங்கிணைப்பாளருமான ஆசிரியர் மு. அப்துல் ரசாக் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். அரசு நூலகரும், கண்காட்சி ஒருங்கிணைப்பாளருமான அ. முஜீப் நன்றி கூற, தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# மெல்பனில் இன்று ஆவூரானின் சின்னான் (குறுநாவல்) வெளியீடு

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், எழுத்தாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான ஆவூரான் சந்திரனுக்கு இந்த ஆண்டு மணிவிழாக் காலம் ஆகும்.






இவர் எழுதிய சின்னான் (குறுநாவல்) வெளியீடு, இன்று 28 ஆம் திகதி ( 28 012023 ) சனிக்கிழமை மாலை 300 மணிக்கு மெல்பனில் பேர்விக் மூத்த பிரஜைகள் மண்டபத்தில் நடைபெறும்.

முகவரி: 112, High Street, Berwick, Vic – 3806

எழுத்தாளர், வானொலி ஊடகவியலாளர் திருமதி சாந்தினி புவநேந்திரராஜா அவர்களின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில், எழுத்தாளர் ஆவூரானின் வாழ்வும் பணிகளும் பற்றியும் சின்னான் குறுநாவல் பற்றியும் இலக்கிய ஆர்வலர்கள் உரையாற்றுவர்.

ஆவூரானின் முதலாவது கதைத் தொகுதியான ஆத்மாவைத் தொலைத்தவர்கள் நூல் சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வெளியீடாக வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலை கொழும்பு ஞானம் இலக்கியப் பண்ணை பதிப்பித்தது. தற்போது வெளியாகியிருக்கும் சின்னான் குறுநாவல் யாழ்ப்பாணம் ஜீவநதி வெளியீடாக ஆவூரானின் மணிவிழாக்காலத்தில் வரவாகியுள்ளது.

# கொழும்பு பி.எம்.ஐ.சி.எச் இல் APIIT பட்டமளிப்பு விழா 2022

இலங்கையின் முதல்தர வெளிநாட்டு உயர்கல்வி வழங்குனரான ஆசியா பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (APIIT Sri Lanka) வருடாந்த பட்டமளிப்பு விழா கொழும்பு BMICH பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை நெஸ்லே நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான ஜேசன் அவன்சேனா வருகை தந்ததோடு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டபர்ட்ஷெயர் பல்கலைக் கழகத்தின் (Staffordshire University, UK) துணைவேந்தர் மற்றும் தலைமை நிர்வாகியான பேராசிரியர் மார்டின் ஜோன்ஸ் தனது வாழ்த்துக்களை தெரிவித்திருந்தார்.



பட்டமளிப்பு விழாவின் பிரதம விருந்தினரான நெஸ்லே லங்கா பீ எல் சீ இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஜேசன் அவன்சேனா (இடமிருந்து வலமாக) மற்றும் நெஸ்லே லங்கா ஸ்ரீலங்காவின் தலைவர் பந்துல ஏகொடகே

இப்பட்டமளிப்பு விழாவின் போது 456 மாணவர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டபர்ட்ஷெயர் பல்கலைக் கழகத்தின் வியாபார, தகவல் தொழிநுட்பம் மற்றும் சட்டத் துறைகளில் பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் வழங்கப்பெற்றது.

இந்நிகழ்வின்போது மென்பொருள் பொறியியல் (Software Engineering), கணினி நெட்வேர்க் மற்றும் பாதுகாப்பு (Computer Network and Security), கணினி அறிவியல் (Computer Science), சைபர் பாதுகாப்பு (Cyber Security), சர்வதேச வணிக முகாமைத்துவம் (International Business Management) மற்றும் சட்டம் (Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான கௌரவ பட்டமளிக்கப்பட்டதோடு, வணிக நிர்வாகம் (MBA), வணிக கணினி அறிவியல் (MSc Computer Science Business Computing), தொழிநுட்ப முகாமைத்துவம் (Msc Technology Management) மற்றும் சர்வதேச வணிக சட்டம்(LLM International Business Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான முதுகலைப் பட்டமளிக்கப்பட்டது.

இவ்விழாவில் 80 மாணவர்கள் முதல் வகுப்பு கௌரவ பட்டங்களையும், 154 மாணவர்கள் இரண்டாம் வகுப்பு கௌரவ பட்டங்களையும், 46 மாணவர்கள் அதிசிறந்த முதுகலை பட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இவ்வருடம் நொஹிம் லகிந்து ஹேவாவஸம் (மென்பொருள் பொறியியல் கௌரவ பட்டம்), பாத்திமா அமீரா மொஹமட் அஸீர் (கணினி நெட்வேர்க் மற்றும் பாதுகாப்பு கௌரவ பட்டம்), பத்மராஜ் ஹெய்ஷிகன் (கணினி அறிவியல் கௌரவ பட்டம்), சந்தியாப்பு சஜானி தனன்கா த சில்வா (சர்வதேச வணிக முகாமைத்துவம் கௌரவ பட்டம்), ஜயசிங்க முதியன்சேலாகே தர்ஷிகா சமாளி ஜயசிங்க (சட்டப்படிப்பு கௌரவ பட்டம்), ராஜகருணா முதியன்சேலாகே பியூமி எரங்கி ராஜ கருணா (வணிக நிர்வாக முதுகலை பட்டம்), என்டன் ஸ்ரீஹான் தனுஷ்க மிரன்டா (கணினி அறிவியல் முதுகலை பட்டம்), ஜீவன்த அஷான் அன்றாடிகே சில்வா ஜயரத்ன (சர்வதேச வணிக சட்டம் முதுகலை பட்டம்) ஆகியோருக்கு தங்க பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சிறப்பு விருந்தினரான ஜேசன் அவன்சேனா பட்டதாரிகளை பாராட்டி, அவர்களை ஆர்வத்துடன் முன்னேறுமாறு கேட்டுக் கொண்டார்.

# கொங்கோ வரலாற்று நாயகனின் நினைவாக உருவான மொஸ்கோ 'பாட்ரிஸ் லுமும்பா' நட்புறவு பல்கலைக்கழகம்

ஜனவரி 17ஆம் திகதி ஆபிரிக்காவில் கொங்கோ நாட்டு விடுதலையின் வரலாற்று நாயகனான பாட்ரிஸ் லுமும்பாவின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள 'பாட்ரிஸ் லுமும்பா' நட்புறவு பல்கலைக்கழகம், கொங்கோ வரலாற்று நாயகனின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

'லுமும்பா' என்றால் இலங்கை, இந்திய மக்களுக்கு உடனடியாக பரிச்சயமாவது, மொஸ்கோவில் உள்ள பல்கலைக்கழகமாகும். ஆசியா, ஆபிரிக்கா, மற்றும் தென்னமெரிக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை இலவசமாக வழங்கும் முகமாக ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. பலரும் அறிந்த லுமும்பா மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் 1960இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த பல்கலைக்கழகத்தை பலரும் தெரிந்து கொண்டாலும், யாரிந்த லுமும்பா என்பது பற்றி பலருக்குத் தெரிவதில்லை.

பாட்ரிஸ் லுமும்பா (Patrice □mery Lumumba), (ஜுலை 2, 1925 – ஜனவரி 17, 1961) ஆபிரிக்கத் தலைவரும் கொங்கோ குடியரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமரும் ஆவார். இவரே பெல்சியத்திடமிருந்து தமது நாட்டுக்கு ஜுன் 1960 இல் விடுதலை பெற உதவிய தலைவர். ஆனாலும் 10 வாரங்களின் பின்னர் லுமும்பாவின் அரசு இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் கவிழ்க்கப்பட்டது. இதன் போது கைது செய்யப்பட்ட பாட்ரிஸ் லுமும்பா மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் (Peoples' Friendship University of Russia) ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவின் தெற்கில் அமைந்துள்ள ஒரு பல்கலைக்கழகம் ஆகும். இக்கல்வி நிலையம் 1960 ஆம் ஆண்டில் பாட்ரிஸ் லுமும்பா நினைவாக 'பாட்ரிஸ் லுமும்பா மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பனிப்போர்க் காலத்தில் ஆசியா, ஆபிரிக்கா, மற்றும் தென்னமெரிக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் மாணவர்களுக்கு உயர்கல்வி, மற்றும் பயிற்சித் திட்டங்களை இலவசமாக வழங்கும் முகமாக இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சில வளர்ந்த நாடுகளில் இருந்தும் குறைந்தளவு மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வி கற்றார்கள்.

இந்த மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் சோவியத் அரசாங்கத்தால் 1960, பெப்ரவரி 5 இல் ஆரம்பிக்கப்பட்டது. கொங்கோவில் கொல்லப்பட்ட கறுப்பினத் தலைவர் லுமும்பாவின் நினைவாக பெப்ரவரி 22, 1961 இல் இப்பல்கலைக்கழகத்துக்கு அவரது பெயர் சூட்டப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட முதலாம் ஆண்டில் 59 நாடுகளில் இருந்து மொத்தம் 539 வெளிநாட்டு மாணவர்களும் 57 சோவியத் மாணவர்களும் இப்பல்கலைக் கழகத்துக்கு சேர்க்கப்பட்டார்கள்.

1990களில் சோவியத் ஒன்றியத்தின் கலைப்பிற்குப் பின்னர் பெப்ரவரி 5, 1992 இப்பல்கலைக்கழகத்தின் பெயர் 'ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம்' என மாற்றப்பட்டது.

இன்று, இப்பல்கலைக்கழகத்தின் 47,000 இற்கும் அதிகமான பட்டதாரிகள் உலகின் 165 நாடுகளில் பணியாற்றுகிறார்கள். தற்போது இங்கு பட்டப்பின்படிப்பு, மற்றும் தொழிற்பயிற்சி உட்பட 57 கல்வித்திட்டங்களில் 131 நாடுகளின் 450 இனங்களில் இருந்து சுமார் 23,000 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இவர்களில் சுமார் 3500 வெளிநாட்டினர் அடங்குவர்.



லுமும்பா முன்னைய பெல்ஜிய காலனியான கொங்கோவில் டெட்டெலா என்ற இனத்தில் பிறந்தவர். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு அரச அஞ்சல் சேவையில் ஊழியராகச் சேர்ந்தார். 1955 இல் பெல்ஜிய தாராண்மைவாதக் கட்சியில் இணைந்தார். இதன் பின் அவர் நாடு திரும்பி 'கொங்கோ தேசிய இயக்கம்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை 1958 இல் ஆரம்பித்துப் பின்னர் அதன் தலைவரும் ஆனார். டிசம்பர் 1958 இல் கானாவில் இடம்பெற்ற அனைத்து ஆப்பிரிக்க மக்கள் மாநாட்டில் லுமும்பா கலந்து கொண்டார்.

ஜனவரி 27 இல் மாநாட்டில் கொங்கோவின் விடுதலை அறிவிக்கப்பட்டது. மே, 1960 இல் நடந்த பொதுத்தேர்தலில் லுமும்பாவின் கட்சி பெரும் வெற்றி பெற்றது. அதனை அடுத்து ஜுன் 23, 1960 இல் லுமும்பா நாட்டின் பிரதமரானார்.

கொங்கோ மக்களின் வாழ்க்கைத்தரம் ஆபிரிக்காவிலேயே மிகவும் தாழ்வானதாக இருந்தது. 80 வருட காலனி ஆதிக்க கொடுமையினால் நாட்டின் மக்கள் தொகை, 2 மடங்காக குறைந்திருந்தது. ஆபிரிக்காவிலேயே கொங்கோவில் மட்டும் 200க்கும் அதிகமான பழங்குடி இனப் பிரிவுகள் இருந்தன. பழங்குடி இனவாதத்தை அபாயகரமான 'உள்நாட்டு எதிரியாக' கருதிய லுமும்பா, மக்களை இனவாதத்திற்கு அடிமையாகாமல் பொதுத்தேசிய நலன்களுக்காகப் பாடுபடும்படி அழைத்தார்.

அக்ரா(கானா) நகரத்தில் நடைபெற்ற ஆபிரிக்க மக்கள் மாநாட்டிற்கு காங்கோவின் பிரதிநிதியாக 1958ஆம் ஆண்டில் சென்ற அவர் அங்கு 'காலனி ஆதிக்கத்தின் கீழ் உள்ள எல்லா நாட்டு மக்களின் ஆசைகளும் ஒன்றே, அவர்களின் தலை விதிகளும் ஒன்றே. ஆபிரிக்காவில் ஏதாவது ஒரு பகுதி மட்டும் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தாலும் கூட ஆபிரிக்கா எப்போதுமே சுதந்திரத்தையும் விடுதலையையும் அடையாது' என்று ஆபிரிக்கர்களின் ஒற்றுமையை வலியுறுத்தினார்.

பெருகிவந்த தேசிய இயக்கத்தின் தாக்கத்தால் பெல்ஜியம் பின்வாங்கியது. 1960ஆம் ஆண்டு ஜுன் 30ஆம் நாள் கொங்கோ குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது. பிரதம மந்திரியான பாட்ரிஸ் தன்னுடைய அரசாங்கத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு வழியில் நடத்த ஆரம்பித்தார்.

## கொங்கோவின் விடுதலை :

கொங்கோவின் விடுதலை ஜுன் 30, 1960 இல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. விடுதலை நாளன்று பத்திரிசு லுமும்பா தனது முதலாவது புகழ் பெற்ற உரையை நாட்டு மக்களுக்கு வழங்கினார்.

லுமும்பா பிரதமரான சில நாட்களுக்குள்ளேயே இராணுவத்தினர் தவிர மற்றைய அரசு ஊழியர்களுக்குக் கணிசமான ஊதிய உயர்வை வழங்கினார். இது இராணுவத்தினரிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

தைஸ்வில் இராணுவ முகாமில் இராணுவத்தினர் தமது மேலதிகாரிகளின் மீது தாக்குதல்களைத் தொடங்கினர். இது பின்னர் பல இடங்களுக்கும் பரவியது. விரைவில் சட்டம், ஒழுங்கு நாட்டில் இல்லாமலே போனது. பல ஐரோப்பியர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

கட்டாங்கா மாகாணம் ஜுன் 1960 இல் மொயிஸ் த்சோம்பே தலைமையில் பெல்ஜியத்தின் ஆதரவுடன் தனது விடுதலையை அறிவித்தது. ஐநா படைகள் வரவழைக்கப்பட்டன. இதனால் லுமும்பா சோவியத் ஒன்றியத்தின் உதவியைக் கோரினார்.

செப்டம்பர் 1960 இல் அந்நாட்டின் அதிபர் அதிபர் காசாவுபு, சட்டத்துக்கு மாறாக லுமும்பாவின் அரசைக் கலைக்க அறிவித்தார்.

செப்டம்பர் 14, 1960 இல் சிஐஏஇன் ஆதரவுடன் இராணுவத் தளபதி ஜோசப் மோபுட்டு இராணுவப் புரட்சியை மேற்கொண்டு லுமும்பா அரசைப் பதவியிலிருந்து கலைத்தார்.

லுமும்பா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். ஐநா படைகள் அவருக்குப் பாதுகாப்பு அளித்தனர். வீட்டுக் காவலிலிருந்து தப்பித்த லுமும்பா ஸ்டான்லிவில் நோக்கி நீண்ட தூரப் பயணத்தை மேற்கொண்டார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் நேட்டோவின் (NATO) ராணுவத் தளங்களை அமைப்பதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று அவர் கூறியது மேற்கு நாடுகளின் நலன்களுக்கு எதிராக இருந்தது. கூட்டு சேராக்கொள்கை, காலனி ஆதிக்கத்திலிருந்தும், நிறவெறி ஆட்சியில் இருந்தும் ஆப்பிரிக்காவை முழுமையாக விடுவித்தல், காங்கோவிற்கும் சோஷலிச நாடுகளுக்கும் சுமுகமான உறவை வளர்ப்பது என்ற பாட்ரிஸின் வெளியுறவுக் கொள்கை ஏகாதிபத்தியத்திற்கு ஒத்துவரவில்லை.

மொபுட்டுவின் படையினரால் அவர் 1960, டிசம்பர் 1 இல் 'போர்ட் ஃபிராங்கி' என்ற இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். உள்ளூர் ஐநா அலுவலகத்திடம் அவர் முறையிட்ட போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கின்ஷாசா நகருக்குக் கொண்டு செல்லப்பட்டார் லுமும்பா. இராணுவத்தினரிடையே குழப்பத்தை ஏற்படுத்த முயன்றது போன்ற பல குற்றச்சாட்டுக்கள் லுமும்பாவுக்கெதிராகச் சுமத்தப்பட்டன.

சட்டத்தின் மூலம் மட்டுமே லுமும்பா விசாரிக்கப்பட வேண்டும் என ஐநா செயலர் டாக் ஹமாஷெல்ட் கொங்கோ அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தார். சோவியத் ஒன்றியம், லுமும்பா உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

ஐநா பாதுகாப்புச் சபையில் லுமும்பாவிற்கு ஆதரவாகச் சோவியத் ஒன்றியம் டிசம்பர் 14, 1960 இல் கொண்டுவந்த தீர்மானம் 82 வாக்குகளால் தோற்றுப் போனது. ஐநா செயலருக்குக் கொங்கோ விவகாரத்தில் அதிக அதிகாரம் அளிக்க மேலை நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தைச் சோவியத் ஒன்றியம் தனது வீட்டோ பலத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்தியது.

லுமும்பாவின் பாதுகாப்புக் கருதி அவர் கட்டங்கா மாகாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். ஜனவரி 17, 1961 இல் லுமும்பா பெல்ஜிய அதிகாரத்துக்குட்பட்ட கட்டங்காவில் பலமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார். அதே நாளிரவு காடொன்றினுள் கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டுக் கொன்றவர்களில் இருவர் கேப்டன் ஜுலியென் காட் மற்றும் காவற்துறை அதிபர் வேர்ஷுரே ஆகியோர். இவர்கள் இருவரும் பெல்ஜிய நாட்டவர்கள் ஆவர்

கொங்கோ அதிபர் மற்றும் இரு அமைச்சர்களும் லுமும்பா சுடப்படும் போது அங்கு இருந்திருக்கிறார்கள். லுமும்பாவுடன் சேர்ந்து அவரது இரு ஆதரவாளர்களும் அப்போது சுட்டுக் கொல்லப்பட்டனர். லுமும்பாவின் உடல் அங்கேயே புதைக்கப்பட்டது.

மூன்று வாரங்களின் பின்னரேயே லுமும்பாவின் இறப்பு அறிவிக்கப்பட்டது. லுமும்பா சிறையிலிருந்து தப்பிக்க முயன்றதாகவும் ஆத்திரமடைந்த ஊர்வாசிகளே அவரைக் கொலை செய்ததாகவும் உள்ளூர் வானொலி தகவல் தந்தது.

ஒரு சாதாரண விவசாயக் கூலியாக வாழ்க்கையை ஆரம்பித்த பாட்ரிஸ் லுமும்பா தன்னுடைய புரட்சிகர இலட்சியங்களால் நாட்டின் பிரதமராக உயர்ந்து சதிகாரர்களின் சதியால் பலியானார்.

இன்றும் ஆபிரிக்காவுக்கும் அதன் மக்களுக்கும் சிறந்த ஒரு வழிகாட்டியாக திகழ்ந்து வரும் பாட்ரிஸ் லுமும்பா உண்மையில் காங்கோ தேசிய இயக்கத்தின் பேரொளிதான்..



பாட்ரிஸ் லுமும்பா ஆபிரிக்கவின் விடுதலை வரலாற்று நாயகர்களில் மறக்க மறுக்க முடியாத பெயராக என்றும் மிளிர்கிறார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# ஒலுவில் அல் மதீனா வித்தியாலயம் புலமைப் பரீட்சையில் சாதனை

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



ஒலுவில் அல் மதீனா வித்தியாலயத்தில் 2022 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 26 மாணவர்களில் 4 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

எம்.ஏ. ஹனிகா ஹானி (153 புள்ளிகள்), எம்.ஐ. அஸ்னத் ஸாறா (148 புள்ளிகள்), எம்.என். நப்ஹான் (144 புள்ளிகள்), சனாரி ஹாத்தூன் (143 புள்ளிகள்) பெற்றுள்ளனர்.

ஏனைய மாணவர்கள் அனைவரும் திறமைச் சித்தியை பெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

# வரிச் சுமை: கல்முனையில் ஆர்ப்பாட்டம்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கான வரி விதிப்பு சம்பந்தமாக தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு (26) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக நடாத்தியது. பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து இக் கண்ட ஆர்ப்பட்டத்தினை மேற்கொண்டனர். அதிகரித்த வரிகளை வசூலிப்பதன் மூலம் பொதுத்துறையில் பணியாற்றும் தொழில்வாண்மை மிக்கோருக்கான ஊதியத்தினை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் , அவ்வாறு வரிகள் விதிக்கப்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத்தான் என்ற போலியான பிரசாரத்தினையும் முன்னெடுத்து வருகின்றது. ஆனால் எமது வரிகள் மூலம் திரட்டப்படும் பணம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்திற்காக ஒருபோதும் பயன்படுத்தப்படபோவதில்லை.

## அனுராதபுரத்தில் வீடொன்றில்...

பொலிஸார் தெரிவித்தனர்.

அலையபத்துவ, மஹமன்கடவல, கொக்கிச்சிய வீதி, குளத்துக்கருகில் வசிக்கும் நிஷாந்தி ஹேமலதா (33) என்ற தாயார் மற்றும் அவரது 10 வயது மகள் ஹசங்க பிரபோதனி,05 வயது மகன் நவோத் ஜயரத்ன ஆகியோர் உடல் கருகி கொல்லப்பட்டுள்ளனர். அவர்களை காப்பாற்றப்போராடி தீக்காயங்களுக்குள்ளான 37 வயதான தந்தை சமந்த ஜயரத்ன, கைகளில் ஏற்பட்ட தீக்காயங்கள் காரணமாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் (26ஆம் திகதி) இரவு 11:45க்கும் 12:30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், தீ பரவியிருக்கலாமென சந்தேகிக்கப்படுவதுடன், பொலிஸ் அவசர இலக்கத்திற்கு (119) கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம மற்றும் அதிகாரிகள் குழுவினர் சென்று தீப்பிடித்த வீட்டை ஆய்வு செய்தனர்.

தீ பரவியதும், வீட்டின் முன்புறம் வசிக்கும் பக்கத்து வீட்டுக்காரர், வீட்டின் பக்கத்திலிருந்து அலறல் சத்தம் கேட்டு பொலிசாருக்கு தகவல் வழங்கி, தீயை அணைக்கும்படி கிராம மக்களிடம் கூச்சலிட்டுள்ளார். ஆனால் அதற்குள் இரண்டு குழந்தைகளும் தாயும் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர்.

தீயில் சிக்கி உயிரிழந்த பத்து வயது சிறுமி ஹசங்க நேற்று வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளதுடன், உயிரிழந்தவரின் இளைய மகன் வினுஜா அடுத்த வருடம் முதல் முன்பள்ளியில் கல்வி கற்க ஆயத்தமாக இருந்ததாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இரு பிள்ளைகளின் தந்தை சமந்த ஜயரத்ன, இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று தற்போது மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும், உயிரிழந்த தாய், வீட்டில் இரண்டு குழந்தைகளையும் கவனித்து வந்ததாகவும் தெரிவித்தனர். அருகிலுள்ள வீட்டிலிருந்து மின்சாரம் எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 13ஆவது அரசியலமைப்பு...

சட்டத்தை நடைமுறைப்படுத்த நான் கட்டுப்பட்டுள்ளேன். அந்தவகையில் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டம் கடந்த 37 ஆண்டுகளாக எமது சட்டப் புத்தகத்திலும் அரசியலமைப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நான் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து, 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும். அப்படி இல்லையெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத் தாமலும், நீக்காமலும் எமக்கு இவற்றுக்கிடையே நிற்க முடியாது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறுக் கோரி பாராளுமன்றத்தில் யார்? வேண்டுமானாலும் தனிப்பட்ட பிரேரணையை முன்வைக்க முடியும். அதற்குப் பெரும்பான்மையானவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தால் என்ன செய்வது? அப்படியானால் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நேரிடும்.

நான் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நீதியரசர் குழாம் முன்வைத்துள்ள தீர்ப்புக்கமையவே செயற்படுகின்றேன். விசேடமாக பிரதம நீதியரசர் பாலிந்த ரணசிங்கவின் தீர்ப்புக்கமையவே செயற்படுகிறேன். இதனை வரையறுத்துப் பார்த்தால், நாம் ஒற்றையாட்சியில் இருக்கின்றோம். நான் சமஸ்டி ஆட்சி முறையை எதிர்கின்றேன். ஆனால் அதிகாரங்களைப் பகிரத் தயார்.

எமது மாகாண சபைகளுக்கு லண்டன் நகரசபைக்குள்ள அதிகாரங்கள் கூட இல்லை. லண்டன் நகர சபைக்கு இதனை விடவும் அதிகாரங்களுள்ளன. எனவே இதனை சமஸ்டி இராச்சியம் எனக் கூறமுடியாது. இதனை சமஸ்டி இராச்சியமாவதைத் தவிர்க்க, ஜே.ஆர் ஜயவர்த்தன சட்டத்தரணிகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இதுவரை நாட்டில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஜனாதிபதிகளும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவே தீர்மானித்தனர். இதனை இனிமேலும் நடைமுறைப்படுத்தவில்லையெனில், நாம் அதனை அரசியலமைப்பிலிருந்து நீக்க வேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் எஞ்சிய காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கான பொறுப்பை நாம் பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் முன்வைக்கும் ஆலோசனைகளுக்கமைய அவ்விடயம் தொடர்பில் நாம் செயற்பட வேண்டும். பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகள் ஆகியோருடன் கலந்துரையாடியே நாம் காணிகளைப் பகிர்ந்தளித்தோம்.

அத்துடன், காணி ஆணைக்குழுவை நாம் விரைவில் நியமிக்க வேண்டும். அதற்கான சட்டமூலத்தை எதிர்வரும் மார்ச் மாதமளவில் நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதில் மாகாண ரீதியில் 09 பேரை நியமிக்குமாறு அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 12 பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். அதன் பின்னர் தேசிய காணி கொள்கையொன்றும் அறிமுகம் செய்ய வேண்டும். அப்போது காணி ஆணைக்குழுவால் தேசிய காணிக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பதிலாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு எதிர்ப்பு இருந்தால், அதற்கான திருத்தமொன்றைக் கொண்டு வந்து அதனை தோற்கடிக்க முடியும். இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்தாக வேண்டும்.

நான் இது குறித்த யோசனைகளை எதிர்வரும் 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இதில் உங்களின் கருத்துக்களையும் 04 ஆம் திகதிக்கு முன்னர் என்னிடம் முன்வைத்தால், அவற்றையும் இணைத்துக் கொண்டு நாம் முன்நோக்கிச் செல்வோம்.

பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்பவற்றை நாம் அனைவரும் இணங்கும் வகையில் படிப்படியாக தீர்த்துக் கொள்ள முடியும். இந்தப் பிரச்சினைகளில் தங்கிவிடாது, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு முன்நோக்கிச் செல்வோம்.

நாம் யாரும் காட்டிக்கொடுக்கப் போவதில்லை. நாட்டைப் பிரிக்கப் போவதில்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். இணைந்து பயணிப்போம்.

## பரீட்சை நடக்கும் காலத்தில்...

விடுத்திருந்த போதும் அதற்கு ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை என்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மூன்று இலட்சத்து 31 ஆயிரத்து 709 மாணவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பரீட்சை நடைபெறும் காலத்தில் திட்டமிட்ட மின்சார துண்டிப்பை மேற்கொள்வதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு ஒருபோதும் அங்கீகாரம் வழங்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பெப்ரவரி 17ஆம் திகதி வரை தடையில்லாமல் மின்சாரத்தை வழங்குமாறு ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவுறுத்துவதாகவும் அதுவரை திட்டமிட்ட மின்சார தடைகளுக்கான அனுமதி கோரிக்கைகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதை தவித்துக் கொள்ளுமாறும் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க மின்சார சபையைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நீர்கொழும்பு கடல் மற்றும்...

நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டு வர முயற்சித்த 1,447 கிலோ பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. கடற் படைக்கு சொந்தமான இரண்டு (02) விரைவு படகுகள் கடற்பகுதியில் ரோந்து சென்ற போது கடலில் மிதந்து கொண்டிருந்த 21 பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தரையிறங்க முடியாமல் கடத்தல்காரர்களால் கடலில் கைவிடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் 1,026 கிலோ பீடி இலைகள் 21 பைகளில் அடைக்கப்பட்டிருந்தன.

மேலும், கடற்படைக்கு கிடைத்த தகவலின்படி, நீர்கொழும்பு பிடிபன களப்பு பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது அங்கு நிறுத்தப்பட்டிருந்த டிங்கி படகொன்றில் 420 கிலோ 900 கிராம் பீடி இலைகள் 13 பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன.

## வரி அதிகரிப்பு...

சர்வதேச நாணய நிதியம் சாத்தியமான சமிக்ஞைகளை வழங்கி வரும் நிலையில் இலங்கைக்கு அந்த நிதியம் வழங்க தீர்மானித்துள்ள நிதி ஒத்துழைப்பில் முதலாவது தவணை நிதியை மிக விரைவில் நாட்டுக்கு வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அரசாங்கம் மேற்கொண்டுள்ள நிதித்துறை மறுசீரமைப்பை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ள போதிலும் அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளையும் நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கான நடவடிக்கைகள் சற்று கடினமாக அமையும் என்ற போதிலும்.கடன் உதவியை பெற்றுக் கொள்வதற்கு அதுவே சிறந்த வழியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியனுடன் மேற்கொள்ளப் பட்ட பேச்சு வார்த்தையின் போது நிதித்துறையில் மேலும் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவருக்கு தாம் தெளிவுபடுத்தியதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வது தொடர்பிலும் அவருக்கு தெளிவுபடுத்தப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கச்சதீவு ஆலய திருவிழாவுக்கு...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பில் நடைபெறும் முன்னாயத்த கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் பொருளாதாரம...

இன்று இலங்கையின் பொருளாதாரம் நிலைத்திருப்பதற்கு இந்தியா வழங்கிய ஆதரவே காரணம் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும்.

எவருமே தலையிடாத போது இந்தியாவின் ஆதரவு கிடைத்தது. சர்வதேச நாணய நிதியத்திடம் சுமார் 2.9 பில்லியன் டொலர் கடனுக்காக இலங்கை சென்றுள்ளது. அது பல நிபந்தனைகளுடன் பல ஆண்டுகளாக வழங்கப்படும். அதனுடன் ஒப்பிடுகையில், இந்தியா உண்மையில் எங்களுக்கு 3.9 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. சீனா மற்றும் பெரிஸ் கிளப்புக்கு முன்னதாக இந்தியாவே இந்த உதவியை வழங்கியுள்ளது.

இதேவேளை எதிர்காலத்தில் இந்தியாவின் முதலீடு, சுற்றுலா மற்றும் வர்த்தகமென மூன்று முக்கிய பகுதிகளில் இருக்கவேண்டும் என்று தாம் கருதுவதாக மிலிந்த மொரகொட குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் கப்பல் விடயத்தை அடுத்து எழுந்த பிரச்சினை குறித்து கருத்து வெளியிட்ட அவர், இலங்கையின் வரலாறு முழுவதிலும், நாடு, பெரும் சக்திகளின் போட்டிகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்று தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் பாதுகாப்பு பிரச்சினைகள் வரும்போது, இந்தியாவின் பாதுகாப்பே இலங்கையின் பாதுகாப்பாகுமென்றும் மிலிந்த மொரகொட கூறியுள்ளார்.

## அரசியல் அபிலாஷைகள்... 03ஆம் பக்க தொடர்...

நெருக்கடிகளை சமாளிக்கும் வகையிலும், உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், ஏற்றுமதிக்காகவும் விவசாய உற்பத்திகளை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து IMF பிரதிநிதிகளிடம் பிரதமர் விளக்கினார்.

அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைப்பதற்கும், ஏற்றுமதிப் பொருட்களை அதிகரிப்பதற்கும், சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கான நலன்புரிச் செயற்பாடுகளின் அவசியம் தொடர்பிலும் பிரதமர் இதன் போது வலியுறுத்தினார்.

பிரதமர் சுட்டிக்காட்டியபடி, கடன்களை மறுசீரமைப்பதற்கும், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் திட்டங்களை தயாரிக்கும் செயற்பாட்டில், பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக் கூடிய குழுக்களுக்கான பாதுகாப்பும் அவசியம் என கலாநிதி சுப்பிரமணியன் கூறினார். எவ்வாறாயினும், ஆகக் குறைந்தது அரச துறையில் ஊதியத்திற்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தாலும், பலர் தங்கள் வருமான மார்க்கங்களை இழந்துள்ளதால், பொதுத்துறையினர் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## மருந்துத் தட்டுப்பாடு...

வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சு உட்பட அதிகாரிகளுக்கு அவசியமான அழுத்தங்களை உலக சுகாதார ஸ்தாபனம் கொடுக்கவேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து தாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்துவந்துள்ளோமென்றும் அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்துக்கான வேண்டுகோளை கையளித்த பின்னர் இதனை அவர் தெரிவித்துள்ளார். தாங்க முடியாத அளவுக்கு மருந்துப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

மருந்துகளை கொள்வனவு செய்வதில் பல முறைகேடுகள், ஊழல்கள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவித்துள்ள அவர், அதிகாரிகளிடம் இது குறித்து வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் சாதகமான பதில் கிடைக்கவில்லையென குறிப்பிட்டுள்ளார். நோயாளிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளுக்கு தெரிவிப்பதன் மூலம் தீர்வை காணமுடியாது என்பதை அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் உணர்ந்துள்ளது இதன் காரணமாகவே உலக சுகாதார ஸ்தாபனத்தை நாட தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உற்பத்தி தடைப்படுவதை... 03ஆம் பக்க தொடர்...

சூரிய மின்னுற்பத்தி நிலையங்களில் பராமரிப்பு வேலைகள் மற்றும் இதர செலவினங்களை செய்யக்கூடிய பொருளாதார பலம் அற்றவர்களாக இருக்கிறோம்.

இவ்வாறான காரணிகள் அதிகரிக்குமானால் புதிய முதலீட்டாளர் வருகையும் குறைவடைய வாய்ப்பு இருப்பதால் உடனடியாக அரசும் மின் சக்தி அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கம் கோட்டுக் கொண்டது.

## பணத்தை வசூலிக்க அடித்து...

மீது வாள் வெட்டு தாக்குதலை நடத்தி காருடன் தீ வைக்க முயன்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ள மூவருக்கும், மீட்டர் வட்டி பணம் வசூலிக்கும் கும்பலுக்கும் தொடர்புள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மீற்றர் வட்டிக்கு கொடுத்த பணத்துக்கான வட்டியை மீள கொடுக்காத நபர் ஒருவரை இரண்டுக்கும் மேற்பட்ட நபர்கள் அடங்கிய குழுவொன்று தோட்ட வெளிப் பகுதி ஒன்றுக்கு கடத்தி சென்று, சித்தரவதை செய்து, தாக்குதல் மேற்கொள்ளும் காணொளி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்தது. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் தாக்குதல் நடத்தியவர் அடையாளம் காணப்பட்டு அளவெட்டி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மீற்றர் வட்டிக்கு பணம் வழங்கும் நபர்களிடம் "கொமிசன்" அடிப்படையில் வட்டி வசூலித்து கொடுக்கும் வேலையை குழுவாக செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

வட்டி பணத்தை கொடுக்காத நபர்களை கடத்தி சென்று சித்திரவதை புரிந்து அடித்து துன்புறுத்தி வட்டி பணத்தை வசூலித்து வந்துள்ளனர்.

பணத்தைக் கொடுத்த நபர்களின் உத்தரவில் நடைபெறும் இந்த செயற்பாட்டை காணொளிகளாக பதிவு செய்து பணம் கொடுத்த நபர்களிடம் அந்த காணொளிகளையும் கொடுத்து வந்துள்ளனர்.

அதேவேளை இவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய சென்றால் அங்கு கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர் அவர்களின் முறைப்பாட்டை ஏற்காது திருப்பி அனுப்பி வைப்பதுடன் அவர்கள் பொலிஸ் நிலையம் வந்த விடயத்தை வட்டிக்கு பணம் கொடுத்த நபர்களிடம் அறிவித்தும் விடுவார்.

அதனால் பணம் கொடுத்தவர்கள் முறைப்பாடு செய்ய சென்றவர்களை அச்சுறுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் வட்டி பணத்தை வசூலிக்கும் குழுவை சேர்ந்தவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக வட்டி வசூலிப்பதற்காக ஆட்களை கடத்தி சித்திரவதை புரியும் காணொளி காட்சிகளை ஒரு தரப்பு வெளியிட்டுள்ளது. சுமார் 20 க்கும் மேற்பட்ட காணொளிகள் அவ்வாறு வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி கண்காணிப்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொல்லப்பட்டவரின் மனைவி,... 03ஆம் பக்க தொடர்...

குடும்பத்தை விட்டு பிரிந்து வாகன திருத்தகத்தில் (கராஜ்) தங்கி இருந்துள்ளதாகவும் தெரிய வந்திருந்தது.

பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின்போது, அஜித் என்பவரின் மனைவியும், மனைவியின் தந்தையும் இணைந்து திட்டம் தீட்டி கூலிப்படையை பயன்படுத்தி இவரை படுகொலை செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மனைவியும், மனைவியின் தந்தையும் உள்ளிட்ட 11 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## BOI யின் எதிர்காலத் திட்டம்... 03ஆம் பக்க தொடர்...

குறித்துக் கலந்துரையாடியதுடன், அது தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்பட்டன.

அதேபோன்று, வியட்னாம், மலேசியா போன்ற நாடுகளில் முதலீடுகள் உயர்ந்த அளவில் காணப்படுதல் மற்றும் அந்த நிலைக்கு இலங்கையை அடையச் செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்நாட்டில் காணப்படும் கனிய வளங்களைச் சரியாக அகழ்வு செய்து வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்வதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. முதலீடுகளுக்காக வருகை தரும் பல்வேறு தரப்பினர்களுக்கும் தேவையான அனுமதிகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு இடத்தை ஸ்தாபித்தல் மற்றும் அந்த அனுமதிகளுக்காக எடுக்கும் காலத்தை குறித்தல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அந்தந்தத் துறைகளுக்கிடையில் சரியான தொடர்பாடலுடன் செயற்படுவதன் மூலம் இந்நாட்டில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

## நீதிமன்றின் பிரதிவாதிகளின்...

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தடுக்கத் தவறியமை தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட இருவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதிவாதி கூண்டில் ஏறாது, அதற்கு வெளியே நின்றதை அவதானித்த முறைப்பாட்டு தரப்பு சட்டத்தரணி ரியென்சி ஹர்சகுலரத்ன நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, தமது கட்சிக்காரர் சார்பில் தொடரப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டுக்கமைய எதிர்கால செயற்பாடுகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளதென தெரிவித்தார்.

எனவே, அவர் கூண்டில் ஏற வேண்டிய அவசியமில்லை என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன மீதான வழக்கு நடவடிக்கைகளை தற்காலிகமாக முன்கொண்டு செல்வதில்லையென அறிவித்துள்ள போதும், பிரதிவாதி, கூண்டில் ஏற வேண்டியதில்லையென எந்த இடத்திலும் கூறவில்லையென்று கொழும்பு – கோட்டை நீதவான் திலின கமகே குறிப்பிட்டார்.

இதனையடுத்து, முன்னாள் ஜனாதிபதி சாட்சிகூண்டில் ஏறியுள்ளார். இந்த வழக்கு மீதான விசாரணை மீண்டும் மார்ச் 17 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தமிழர் செவ்வியல் இசைப்பா... 03ஆம் பக்க தொடர்...

அறிமுகவுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. இரகுபரன் நிகழ்த்த, நயவுரையை பேராசிரியர் வ. மகேஸ்வரன் நிகழ்த்துவார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2023 ஜனவரி 28
சனிக்கிழமை



# வடக்கு விவசாய உற்பத்திகளை சிங்கப்பூரில் சந்தைப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை

**கோப்பாய் குறூப் நிருபர்**



வடக்கு மாகாண விவசாய உற்பத்திப் பொருட்களை சிங்கப்பூரில் சந்தைப்படுத்துவது தொடர்பில் சிங்கப்பூர் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் விரைவில் ஆலோசனை நடத்தப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி நாட்டின் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறார்.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கமைய முதலீடுகள் தொடர்பில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் உயர்மட்ட குழுவினருடன் ஏற்கனவே சந்திப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக வடக்கில் சுகாதாரம், விவசாயம் ஆகிய துறைகளை ஊக்குவிப்பதற்கு சிங்கப்பூர் அரசாங்கத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன.யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கின் விவசாய உற்பத்திகளை சிங்கப்பூர் நாட்டில் சந்தைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை சிங்கப்பூர் சிரேஷ்ட அமைச்சரான தர்மன் சண்முகரத்தினத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தொடர்ச்சியாக சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதுவரின் உதவியை பெற்றுக்கொண்டு முன்னோக்கி நகர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார் .

# இராணுவ வீரருக்கு இறுதி மரியாதை

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், கீரிமலை பகுதியில் உயிரிழந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி சுந்தரம் அருளம்பலத்தின் பூதவுடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 21 வேட்டுக்கள் முழங்க தீயில் சங்கமானது. கடந்த 1958ஆம் ஆண்டு இராணுவ சேவையில் இணைந்து, 1980ஆம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் அவர் கடந்த 23ஆம் திகதி கீரிமலையிலுள்ள அவரது இல்லத்தில் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

இறுதிச்சடங்குகள், நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை இந்து மயானத்தில் 21 துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க இராணுவ மரியாதையுடன் அவரது உடல் தீயில் சங்கமமானது. இறுதி நிகழ்வில் யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேயர் ஜெனரல் போத்தொட்ட, இராணுவ படைப்பிரிவு அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# முசலி பிரதேசசபை எல்லைக்குள் 13738 வாக்காளர்கள் வாக்களிக்க பதிவு

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முசலி பிரதேசசபை எல்லைக்குள் 13738 வாக்காளர்கள் வாக்களிக்க பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரிப்பு மேற்கு வட்டாரத்தில் 920 வாக்காளர்களும், அரிப்பு கிழக்கு வட்டாரத்தில் 588 வாக்காளர்களும், பண்டாரவெளி வட்டாரத்தில் 1235 வாக்காளர்களும், புதுவெளி வட்டாரத்தில் 670 வாக்காளர்களும், சிலாவத்துறை வட்டாரத்தில் 1802 வாக்காளர்களும், அகத்திஆறிப்பு மற்றும் கூளாங்குளம் வட்டாரங்களில் 1896 வாக்காளர்களும், பொற்கேணி வட்டாரத்தில் 1333 வாக்காளர்களும், மருதமடு மற்றும் வேப்பங்குளம் வட்டாரங்களில் 1982 வாக்காளர்களும், கொண்டச்சி வட்டாரத்தில் 1678 வாக்காளர்களும், பாலைக்குழி வட்டாரத்தில் 1634 வாக்காளர்களும் பிரதேச செயலகப்பிரிவில் மொத்தமாக 13738 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் 73 பேர் சித்தி

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 73 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு பெறுபேற்றை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேற்றை பெற்று 73 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் 100 – 141 புள்ளிகளுக்கிடையே 96 மாணவர்களும் , 70 – 99 புள்ளிகளுக்கிடையே 21 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு கீழ் 4 மாணவர்களும் பெறுபேற்றை பெற்றுள்ளனர். பாடசாலையில் புலமைப்பரீட்சைக்கு இம்முறை 194 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவற்றில் 190 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளனர். சித்தி விகிதம் 98 விகிதமாக காணப்படுகின்றது.

# யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு மேலும் 5 உறுப்பினர்கள் நியமனம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு மேலும் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக மேலும் 5 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாக பதவி வகித்தவர்களின் பதவிக்காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 16 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன்பின்னர் மேலும் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் வி.கனகசபாபதி, லங்கா சஸ்ரெயினபிள் வென்ஜஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குலேந்திரன் சிவராம், வடக்கு உணவு நிறுவனத்தின் ஸ்தாபகரும், பணிப்பாளருமான கபிலன் கருணானந்தன் மற்றும் யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்நத வண. கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை காலை நீர்வேலிப்பகுதியைச் சேர்ந்த தேவைப்பாடுடைய குடும்பமொன்றுக்கு தையல் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மலேசிய ரோட்டரிக் கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன் இந்த உதவித்திட்டம் வழங்கிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*(படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)*

# இராணுவ வாகனத்தில் மோதியதில் ஒருவர் பலி

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியில், வேம்படி சந்தியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற வாகனவிபத்தில், சவரிமுத்து சகாயரூபன் (வயது 59) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# வங்கியில் வாடிக்கையாளர் தங்க நகை மோசடி; மீள கையளிக்க அதிகாரிகள் சம்மதம்

**யாழ். விசேட நிருபர்**

திருநெல்வேலியில் வங்கியொன்றில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரி ஒருவர் கையாடல் செய்தமையால், தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என வங்கி பிரதிப்பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுடனான சந்திப்பின் போதே குறித்த வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வங்கியில் அடகு வைக்கப்பட்ட ஒரு தொகுதி நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரியொருவர் கையாடல் செய்த காரணத்தினால், கடந்த 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அடகு வைக்கப்பட்ட தமது நகைகளை மீட்க முடியாத வாடிக்கையாளர்களுக்கும், வங்கி அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றைய தினம் நடைபெற்றது. இச்சந்திப்பில் வங்கி பிரதிப் பொது முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில், வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் உங்கள் உணர்வுகளை நாங்கள் மதிக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

# முள்ளியவளை சந்தையில் மாட்டிறைச்சியில் புழு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட முள்ளியவளை பொதுச்சந்தையில் நேற்றுமுன்தினம் விற்பனையான மாட்டிறைச்சியில் புழு இனங்காணப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் முள்ளியவளை சந்தையில் இறைச்சி விற்பனை முடியும் தறுவாயில் இறைச்சி வாங்கிய ஒருவரால் அதில் புழு இருப்பது இனங்காணப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதேச சபை தவிசாளர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் கடையில் இறைச்சி விற்பனை செய்து முடிக்கப்பட்டமையால் வியாபாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதிகளை மீறி அதிகளவான மாடுகள் கொல்லப்பட்டு சந்தைகளில் இறைச்சி விற்பனை செய்யப்பட்டுள்ளமையால் இவ்வாறு ஏற்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

# 12 வருடங்களின் பின்னர் அரசியல் கைதி விடுதலை

**மன்னார் குறூப் நிருபர்**



குற்றம் நிருபிக்கப்படாமல் 2 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை(26) மன்னார் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் பகுதியில் தில்லை ராஜாவுக்கு சொந்தமான மரக்காலை ஒன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டிருந்தார். அதனைதொடர்ந்து கடந்த 12 வருடங்களாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (26) வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி அரசியல் கைதியான சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் குற்றமற்றவர் என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தில்லை ராஜ்,

12 வருடங்களின் பின் தான் குற்றமற்றவன் என நிரூபிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளேன்.

எனக்காகவும் என் விடுதலைக்காகவும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் அவரது உதவியாளர் தாயளனுக்கும் அதேபோன்று யாழ் மாவட்டத்தில் 2016 ஆண்டு இடம்பெற்ற வழக்கில் என் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ரெமிறியேஸுக்கு நன்றிகள்.

நான் எந்த குற்றச்சாட்டுகளும் இன்றி 12 வருடம் சிறையிலிருந்து விடுதலையாகி இருக்கிறேன். என்னைபோன்று இன்னும் 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளாக சிறைகளில் எங்களுடம் ஒன்றாகவிருந்த பலர் இன்னும் சிறையில் இருக்கின்றனர். அவர்களையும் விரைவில் விடுதலை செய்து தர வேண்டும் என கண்ணீருடன் கேட்டுக் கொண்டார்.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் பலி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த தங்கவேலு மோகனச்சந்திரன் (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வேட்டைக்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை கட்டுத்துவக்குடன் சென்ற வேளை அது தவறுதலாக வெடித்ததில் , படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் முதலிடம்

**தலைமன்னார் விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண கல்வி ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் முதலிடத்தை பெற்றுள்ளது.

13 கல்வி வலயங்களை நோக்கும் போது யாழ்ப்பாணம் கல்வி வலயம் முதலிடத்தையும் துணுக்காய் கல்வி வலயம் 13 இடத்தையும் எட்டியுள்ளன.

அதாவது யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 2747 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியதில் 2281 மாணவர்களில் 83.04 வீதமானோர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று முதலிடத்தையும் தென்மராட்சி கல்வி வலயத்தில் 901 மாணவர்கள் தோற்றி 736 மாணவர்களில் 81.69 வீதமானோர் சித்தியடைந்து 2ஆம் இடத்தையும், வடமாராட்சி கல்வி வலயத்தில் 1420 மாணவர்கள் தோற்றி 1151 மாணவர்களில் 81.06 வீதமானோர் சித்தியடைந்து 3ஆம் இடத்தையும், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 2296 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி 1833 மாணவர்களில் 79.83 வீதமானோர் சித்தியடைந்து 4ஆம் இடத்தையும், மடு கல்வி வலயத்தில் 454 மாணவர்கள் தோற்றி 360 மாணவர்களில் 79.3 வீதமானோர் சித்தியடைந்து 5ஆம் இடத்தையும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 1528 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி 1205 மாணவர்களில் 78.86 வீதமானோர் சித்தியடைந்து 6ஆம் இடத்தையும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் 543 மாணவர்களில் 428 மாணவர்களில் 78.82 வீதமானோர் சித்தியடைந்து 7ஆம் இடத்தையும், தீவுப்பகுதி கல்வி வலயத்தில் 536 மாணவர்கள் தோற்றி 422 மாணவர்களில் 78.73 வீதமானோர் சித்தியடைந்து 8ஆம் இடத்தையும், வலிகாமம் கல்வி வலயத்தில் 2618 மாணவர்களில் 2045 மாணவர்களில் 78.11 வீதமானோர் சித்தியடைந்து 9ஆம் இடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 610 மாணவர்களில் 474 மாணவர்கள் 77.7 வீதமானோர் சித்தியடைந்து 10ஆம் இடத்தையும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 1642 மாணவர்கள் தோற்றி 1213 மாணவர்களில் 73.87 வீதமானோர் சித்தியடைந்து 11ஆம் இடத்தையும், மன்னார் கல்வி வலயத்தில் 1705 மாணவர்கள் தோற்றி 1257 மாணவர்களில் 73.72 வீதமானோர் சித்தியடைந்து 12ஆம் இடத்தையும், துணுக்காய் கல்வி வலயத்தில் 627 மாணவர்களில் 441 மாணவர்கள் 70.33 வீதமானோர் சித்தியடைந்து 13ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

# மின்சார கட்டணம் நிலுவையிலுள்ள பாவனையாளர் மீது நடவடிக்கை

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்.மாவட்ட மின்சார பாவனையாளர்கள் ஒரு மாதத்துக்கு மேல் மின்சார கட்டணம் நிலுவையாக உள்ளவர்களின் மின் இணைப்பு எதிர்வரும் வாரங்களில் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் யாழ். தலைமை பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 3 ஆயிரத்து 250 ரூபாய் மீள் இணைப்பு கட்டணம் அறவிடப்படுவதோடு 6 மாத காலத்துக்கு மேலாக மின் துண்டிப்பு செய்யப்பட்டும் நிலுவை செலுத்தப்படாத பாவனையாளர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.







இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தையொட்டி கண்டி இந்திய உதவி தூதரக இல்லத்தில் நடைபெற்ற வைபவத்தில் உதவி இந்திய தூதுவர் கலாநிதி ஆதிரா, இந்திய ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியை வாசிப்பதையும், தூதரக உத்தியோகஸ்த்தர்களையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

# ஒருவர் வாழும்போதே வாழ்த்த வேண்டும்

## இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஆலோசகர் அஹமட் முனவ்வர்

**மாவத்தகம தினகரன் நிருபர்**



ஒருவர் வாழும்போதே வாழ்த்த வேண்டும். மரணத்தின் பின்னர் பாராட்டுவதில் எவ்வித அர்த்தமுமில்லை என இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஆலோசகர் அஹமட் முனவ்வர் தெரிவித்தார்.

சியம்பலாகஸ்கொட்டுவ அந்நூர் அரபுக் கல்லூரியின் 27 ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கலாநிதி சுக்ரியினால் நளீம் ஹாஜியாரின் வாழ்வும் பணியும் நூலாக வெளிவந்திருக்கின்றது. பணம், அறிவும், ஆற்றல்மிக்க அறிஞர்கள் அவரை சூழ இருந்தார்கள். அவருடன் அறிஞர் எஸ். எச். எம். ஜெமீல், கலாநிதி காமில் மரைக்கார். எஸ். எம். கமால்தீன், ஏ.எல்.எம். ராசிக் என்று சொல்லப்படும் மிகப் பெரிய அறிவுசார் குழுமத்தினர்கள் நளீம் ஹாஜியாரை வழிநடத்தினர்.

வாழும்போதே ஒருவரைப் பற்றிப் பேச வேண்டும் அல்லது எழுத வேண்டும். மரணம் அடைந்த பின்னர் பேசி பயனில்லை.

இவ்வாறு தலைசிறந்த உலமாக்களுடைய வாழ்க்கை வரலாறுகள் அதிகம் வர வேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.

# உணவு பாதுகாப்பு, உணவுச்சட்டம்; விழிப்புணர்வு கருத்தரங்கு



**ஹற்றன் விசேட நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து வறிய மக்கள் உணவை சுருக்கி பசியை போக்கும் உணவினை உண்டு வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் எமது நாட்டில் வாழும் இளைஞர் சமுதாயம் பாரிய ஒரு உடல்,உளரீதியான பின்னடைவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன.

மலையகப்பகுதியில் வாழும் தோட்ட மக்கள் மாத்திரம் விதிவிலக்கல்ல. அவர்களும் இந்த பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு பாரிய உணவு தட்டுப்பாட்டை எதிர்நோக்கி வருகின்றனர். நாளாந்தம் போசனைமிக்க உணவினை தவிர்த்து பசியைப் போக்கும் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய உணவினையே உண்டு வருகின்றனர். இதனை கருத்திற் கொண்டு உணவு பாதுகாப்பு மற்றும் உணவுச் சட்டம் தொடர்பான கருந்தரங்கொன்று அரசார்பற்ற அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கொட்டகலை கிரின் இல் விருந்தகத்தில் அமைப்பின் இணைப்பாளர், சமிந் தர்ஷன ஏமாந்த தலைமையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் கல்விமான்கள் அரச ஊழியர்கள் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



இப்பயிற்சியினை சிரேஷ்ட விரிவுரையாளர். முஹட் பசிலி கலந்துகொண்டு கலந்துரையாடல்களை நடாத்தினார்.

உணவுச் சட்டம், சத்துணவு பாதுகாப்பு அரசாங்கத்தின் பொறுப்புகள் தற்போது நாட்டிலுள்ள உணவு தட்டுப்பாடு, வீட்டுத்தோட்டம் செய்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

## மமா/வ/எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் இருவர் சித்தி

**ஆ.ரமேஸ்.**

மமா/வ/எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் ச.சபிக்கா 162, செ.சிரியரசன் 150 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர்.



பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட லுணுகலை ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி மாணவி தமிழ் செல்வன் ஹபிதா (170) புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் லுணுகலை, ஜனதாபுர இலுக்பத்தன தமிழ்ச்செல்வன் வாணி தம்பதிகளின் மூத்த புதல்வி ஆவார்.
படம்: லுணுகல நிருபர்



தெல்தெனிய கல்வி வலயத்துக்குட்பட்ட கஷ்ட பிரதேச பாடசாலையான க/த/ இறங்கலை ஆரம்ப தமிழ் வித்தியாலய மாணவர்கள் இருவர் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். மாணவர்களான குமாரவேல் அசோக் (147) திலீப் குமார் ஹர்ஷான் (149) ஆகியோருடன் அதிபர் எல்.எஸ் . ஜோசப் மற்றும் ஆசிரியர்களான எஸ்.ஏ.ஈ .செல்வராஜா , எஸ்.சரத் பாபு , ஆகியோரை படங்களில் காணலாம். படம்: எம்.ஏ.அமீனுல்லா

# கண்டியில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது

**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் விளையாட்டு வளாகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கை,கால் கட்டப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் நிலைய விசேட பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் (26) பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.



ஹன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இவர். பாதுகாப்பு அதிகாரியாக (தனியார்) பணிபுரிந்துவந்த போத கடந்த ஜனவரி 17ஆம் திகதி அதிகாலை விளையாட்டு வளாக கட்டடத்திற்குள் கைகால் கட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

பெண் தொடர்பான தகராறு காரணமாகவே கொலை இடம்பெற்றிருப்பதாக பொலிஸார் சந்தேகிப்பதாக தெரியவருகின்றது.

# கருவேற்காடுபதி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் தேவஸ்தான வருஷாபிஷேகம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை ஹல்துமுள்ளை கருவேற்காடுபதி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் தேவஸ்தானத்தின் வருஷாபிஷேகம் எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது.

வருஷாபிஷேகத்தை முன்னிட்டு பெப்ரவரி முதலாம் திகதி மாலை 5 மணிக்கு விக்னேஸ்வர வழிபாடு, அனுக்ஞை, வாஸ்து சாந்தி, மஹாகணபதி, விசேட யாகபூஜை ஆகியன இடம்பெற்று, மறுதினம் இரண்டாம் திகதி காலை 8 மணிக்கு வருஷாபிஷேக பூஜை நிகழ்வுகள் நடைபெறும். அன்றைய தினம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். பூஜை நிகழ்வுகள் தேவஸ்தான பிரதம குருவான் பிரம்ம பாலமூர்த்தீஸ்வர சிவாச்சாரியார் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேவஸ்தான நிர்வாக சபையினர் மேற்கொண்டுள்னர்.

# கண்டியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி

**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி புவெலிக்கடை பகுதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதியொன்றை நேற்றுமுன்தினம் (26) கண்டி ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் குழுவொன்று சுற்றிவளைத்துள்ளனர். இதன்போது அங்கிருந்த மூன்று பெண்களையும் கைது செய்துள்ளனர். மேலும் சுற்றிவளைப்பின் போது முகாமையாளர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபசாரத்தில் ஈடுபட்டமை மற்றும் விபசாரத்திற்காக காத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் சந்தேகத்திற்கிடமான பெண்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

கம்பளை, கண்டி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் வசிக்கும் 31, 32 மற்றும் 33 வயதுகளையுடைய பெண்களே இவ்வாறு

### மூவர் கைது

கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத்தின் பணிப்புரைக்கமைய இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

# வங்கி முன்பாக வாகன திருட்டு; சந்தேக நபர்கள் மடக்கி பிடிப்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஹற்றன் நஷனல் வங்கி முன்பாகுயின் எலிசபெத் பிரதான வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பெஜீரோ வாகனமொன்று, இனந்தெரியாதவர்களினால் கடத்தி செல்லப்பட்டு CCTV காணொளியின் உதவியுடன் பொலிஸார் வாகனத்தை மீட்டுள்ளனர்.



வாகனம் காணாமல் போனமை தொடர்பில், இந்த மாதம் 17ஆம் திகதி நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மற்றும் குற்றப்பிரிவினர் இணைந்து திருடப்பட்ட பெஜிரோ ரக வாகனத்தை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டதுடன், நகரிலுள்ள CCTVக்களையும் சோதனை செய்தனர்.

மேலும் சிலர் வாகனத்தை வெலிமடை நுகத்தலாவ பிரதேசத்தில் கண்டதாக தெரிவித்தையடுத்து, அப்பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார், வாகனம் பழுது பார்க்கும் கடைக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுள்ளனர்.

வாகனத்தை நேற்று கண்டுபிடித்த பொலிஸார், சந்தேகத்தின் பெயரில் பெண்ணொருவரைக் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் இதன் பிரதான சந்தேக நபர்கள் இருவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

# ஹற்றன் கல்வி வலயத்தில் 351 மாணவர்கள் சித்தி



**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

ஹற்றன் கல்வி வலயத்தில் 2022 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 351 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக ஆரம்ப கல்விக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் நல்லு சிவகுமார் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் கோட்டம் 1 இல் 184 மாணவர்களும்,கோட்டம் 11இல் 69 மாணவர்களும் கோட்டம் 111 இல் 98 மாணவர்களுமாக மொத்தமாக 351 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டில் எமது நாடு எதிர்நோக்கிய பிரச்சினைகள் ஏராளம். அதன் பிரதிபலிப்புக்களை இன்றும் நாம் அனுபவித்துவருகின்றோம்.

அத்தகைய கடுமையான சூழ்நிலையிலும் தங்களின் அர்ப்பணிப்பு மிக்க கல்விச் சேவையை நேரடியாக நான் பார்வையிடுகின்றேன். உங்கள் சேவைக்கான பலன் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



அறுவடை திருவிழா என்று பொருள்படும் தைப்பொங்கல் பண்டிகையை நினைவுகூறும் வகையில் தைப்பொங்கல் விழா வலப்பனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. வலப்பனை பிரதேச செயலாளர் செல்வி ஷாலிகா லிந்தகும்புர தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொங்கல் சாதம் தயாரித்து பூஜை செய்ததுடன் கோலமிடும் நிகழ்வும் இடம்பெற்றது. தைப்பொங்கலை முன்னிட்டு கோலம் இடும் போட்டியும் நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

# கிழக்கின் குரல்



## யானைகளினால் சேதமாகிய உடைமைகளுக்கு நட்டஈடு கோரல்

மூதூர் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உப்புக்காச்சிமடு கிராமத்தில் காட்டு யானைகளினால் சேதமாக்கப்பட்ட உடைமைகளுக்கு நட்டஈடு கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு, மூதூர் பிரதேச செயலாளரினால் இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உப்புக்காச்சிமடு கிராமத்தில் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு வேளையில் நுழைந்த காட்டு யானைகள், அக்கிராமத்தில் சில வீடுகளையும் பயன்தரும் பயிரினங்களையும் சேதமாக்கியிருந்தன.

இது தொடர்பாக மூதூர் மேற்கு கிராம அலுவலருக்கும் பொலிஸாருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் புகார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், காட்டு யானைகளினால் ஏற்படுத்தப்பட்ட சேத விபரங்கள் தொடர்பாக மூதூர் பிரதேச செயலகத்துக்கு சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவை பரிசீலிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, காட்டு யானைகளினால் சேதமாக்கப்பட்ட உடைமைகளுக்கு நட்டஈடு கோரிய கடிதம், மூதூர் பிரதேச செயலாளரினால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது.

## நலன்புரித்திட்ட பயனாளிகள் தெரிவு; காத்தான்குடியில் தரவு சேகரிப்பு ஆரம்பம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் நலன்புரித் திட்டத்துக்கு பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான தரவு சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், முதற்கட்டமாக காத்தான்குடி 4ஆம் குறிச்சியின் 164ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் இந்நடவடிக்கை கடந்த புதன்கிழமை (25) ஆரம்பிக்கப்பட்டது.

நலன்புரி நன்மைகள் சபையினுடைய நலன்புரிப் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான முன்னோட்டத் தரவுகள், கள விஜயத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

இத்தரவு சேகரிப்புத் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு செயலமர்வு நடத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயஸ்ரீதரின் ஆலோசனைக்கமைய நலன்புரி நன்மைகள் தகவல் உத்தியோகத்தர்களான எம்.எம்.எம்.சப்வான், எம்.ஐ.எம்.பாசில் ஆகியோர் இத்தரவு சேகரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

இச்சந்தேக நபர்களிடம் கஞ்சா உள்ளமை தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவர் முறையே 550 மில்லிகிராம், 570 மில்லிகிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, இவர்களை நேற்று (27) நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

## ஆலிம் நகரில் புதிய பள்ளிவாசல்



அட்டாளைச்சேனை குறுப் நிருபர்

அக்கரைப்பற்று, ஆலிம் நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மஸ்ஜிதுல் அமான் ஜும்மா பள்ளிவாசல் கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இளம் தனவந்தரொருவரினால் பல கோடி ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்டதாக இப்பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

உலமா பெருந்தகைகளினால் குர்ஆன் ஓதப்பட்டதை தொடர்ந்து 'ழுஹர்' தொழுகை நடைபெற்றது. இதன் பின்னர், இப்பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது.

## அம்பாறையில் 300 விவசாயிகளுக்கு உபகரணங்கள்

காரைதீவு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் செத்தல் மிளகாய் செய்கையில் ஈடுபடும் 300 விவசாயிகளுக்கு, விவசாய உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றது.

விவசாய அமைச்சினால் கிழக்கு மாகாண விவசாய அமைச்சினூடாக நவீன விவசாயமயமாக்கல் திட்டத்தின் கீழ் இவ்வுபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில், ஒவ்வொரு விவசாயிக்கும் 16 இலட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 100 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் கோமாரிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) வழங்கப்பட்டன.

## கவிஞர் கலைக்கொழுந்தன் கல்முனையில் காலமானார்



இலங்கையின் மூத்த எழுத்தாளரும் கவிஞருமான கலாபூஷணம் கலைக்கொழுந்தன் தனது 73ஆவது வயதில் கல்முனையில் நேற்று முன்தினம் காலமானார்.

கல்முனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட 2 பிள்ளைகளின் தந்தையான அவர், திடீர் சுகவீனமுற்ற நிலையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27) அவரது இல்லத்தில் நடைபெற்றுடன், கல்முனை இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

எழுத்தாளர், கவிஞர், பகுத்தறிவு பாசறையின் பண்பாளர், பேரிலக்கிய ஆளுமையாளர், சிறந்த அரசியல் பேச்சாளர் எனும் பன்முக ஆளுமை கொண்டவராக கலைக்கொழுந்தன் திகழ்ந்தார்.

இவருடைய கலை இலக்கியப் பணிகளைப் பாராட்டி கடந்த 2013ஆம் ஆண்டு இவருக்கு அரசாங்கம் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

## கண்ணகிபுரம் கிராமத்தில் ஆயுர்வேத மருத்துவ முகாம்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள எல்லைப்புறக் கிராமமான கண்ணகிபுரத்தில், களுவாஞ்சிக்குடி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று (27) ஆயுர்வேத மருத்துவ முகாமொன்று நடத்தப்பட்டது.

இம்மருத்துவ முகாமில் கண்ணகிபுர கிராம மக்கள் கலந்துகொண்டு நன்மையடைந்தனர்.

இம்மருத்துவ முகாமுக்குரிய நிதி அனுசரணையை களுவாஞ்சிக்குடி லயன்ஸ் கழகத்தின் பொருளாளரும் அக்கழகத்தினுடைய மட்டக்களப்பு மாவட்டத்தின் 306 சி பிரிவின் ஆளுநர் சபை உறுப்பினருமான லயன் ஆனந்தராஜா வழங்கியிருந்தனர்.

## தலைமைத்துவம் மிக்க பெண்களை வலுவூட்டும் நிகழ்வு கல்முனையில்!




கல்முனை மத்திய தினகரன், சவளக்கடை குறூப் நிருபர்கள்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்தில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பேணும் வகையில் சமூகத் தலைமைத்துவம் மிக்க பெண்களை அடையாளம் கண்டு அவர்களை வலுவூட்டும் நிகழ்வு, அங்கு கடந்த செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்றது. சமாதானமும் சமூகப்பணி நிறுவனமுமானது சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், கல்முனை பிரதேசத்தில் நல்லிணக்கத்துக்குச் சவாலாகக் காணப்படுகின்ற விடயங்களை அடையாளம் கண்டு, எதிர்காலத்தில் அவற்றுக்கான சமூக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## களுதாவளையில் பொங்கல் விழா



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்துக்குட்பட்ட களுதாவளை ஈஸ்வரன் ஆலய முன்றலில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

வன்னிஹோப் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் அனுசரணையுடனும் களுதாவளை இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டிலும் கடந்த சனிக்கிழமை (21) இப்பொங்கல் விழா நடைபெற்றது.

இதன்போது, பாரம்பரிய முறையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டதுடன், பொங்கல் பண்டிகையின் மகத்துவம் தொடர்பாக அதிதிகளினால் உரைகளும் நிகழ்த்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## மட்டக்களப்பில் 4 பயனாளிகளுக்கு சிறுதொழில் உபகரணங்கள் வழங்கல்



கல்லடி குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களான 4 பேருக்கு நவீன ரக தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை (23) இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் அடையாளம் காணப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில், குளோபல் கொமியூனிட்டி, யூ.எஸ்.எயிட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இவ்வுபகரணங்களை மேற்படி பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

## அம்பாறை மாவட்ட செயலக தைப்பொங்கல் நிகழ்வு



காரைதீவு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்ட செயலகத்தின் தைப்பொங்கல் விழா, பாரம்பரிய முறையில் மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் (26) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன்போது, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் ஏர் பிடிக்க, மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அவுரியின் மேல் நின்று நெல் தூற்ற, அம்பாறை மாவட்ட செயலகத் தைப்பொங்கல் விழா களைகட்டியது.

இவ்விழாவில் ஏர் பிடித்து உழுதல் தொடக்கம் அறுவடை வரையில் செய்முறை விளக்கங்களுடன் தைப்பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றன.





# கிழக்கின் குரல்



## திருமலை - அநுராதபுரச் சந்தி பள்ளிவாசலில் 75ஆவது சுதந்திரதின விழாவை நடத்த ஏற்பாடு

முள்ளிப்பொத்தானை குறூப், கந்தளாய் தினகரன், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்



இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வை எதிர்வரும் 2ஆம் திகதி அஸர் தொழுகையின் பின்னர் மாலை 3.30 மணிக்கு திருகோணமலை அநுராதபுரச் சந்தியில் அமைந்துள்ள ஜும்ஆப் பள்ளிவாசலில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆ.மன்சூர் தெரிவித்தார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைய, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்காவின் அறிவுறுத்தலுக்கமைய இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர தின நிகழ்வை நடத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (26) கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்கா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சுதந்திர தினத்துக்கான விசேட உரை ஆற்றவுள்ளார். இதனைத் தொடர்ந்து, சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

## தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சை; மூதூரில் 171 மாணவர்கள் சித்தி

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 171 மாணவர்கள், கடந்த 2022ஆம் ஆண்டுக்கான தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளதாக, அவ்வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீம் தெரிவித்தார்.

மூதூர் வலயத்தில் 82 பாடசாலைகளைச் சேர்ந்த 1,098 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையின் வகைப்படுத்தலில் முதல் 3 இடங்களை தி/மூ/அந்நஹார் பெண்கள் கல்லூரி (19 மாணவர்கள்) , நஜீப் அப்துல் மஜீத் (19 மாணவர்கள்), மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி (12 மாணவர்கள்) பெற்றுக்கொண்டுள்ளன.

மூதூர் வலயக் கல்வி அலுவலக பிரிவில் அதிகூடியதாக 180 புள்ளிகளைப் பெற்று வலயத்தில் முதல் நிலை மாணவராக சாதனையை, தி/மூ/நஜீப் அப்துல் மஜீத் பாடசாலையின் மாணவரான அபுல் ஹசன் முஹம்மது அப்துல்லாஹ் நிலை நாட்டியுள்ளார்.

## சாய்ந்தமருதில் 3 மாணவர்கள் சித்தி

சாய்ந்தமருது விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது கமு/கமு/அல்கமறுன் வித்தியாலயத்தில் கடந்த 2022ஆம் ஆண்டுக்கான தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாக, அப்பாடசாலையின் அதிபர் எம்.ஐ. நிபாயிஸ் தெரிவித்தார்.

எம்.ஆர்.எம். ஷைஹான் சாதிர் 162 புள்ளிகளையும் ஏ.ஆர்.எப். ஹிபா பானு 149 புள்ளிகளையும் எம்.ஏ.ஸஹ்ரா 147 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

மேலும், இம்மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைவினைப் பயிற்சி நிலையம் திறப்பு



கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் தையல், மனையியல், கைவினைப் பயிற்சிகளுக்கான நிலையமொன்று நேற்று (27) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கந்தளாய் பேராறு மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட யுவதிகள் இப்பயிற்சிகளில் கலந்துகொண்டு பயனடைய முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக செம்மண்னோடையில் கண்டனப்பேரணி

கல்குடா தினகரன் நிருபர்





'போதைப்பொருள் பாவனையிலிருந்து சமூகத்தையும் எமது பிரதேசத்தையும் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ், கண்டனப் பேரணியொன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் செம்மண்னோடையில் நேற்று (27) முன்னெடுக்கப்பட்டது.

செம்மண்னோடை பள்ளிவாசல்கள் சமூக நிறுவனங்களினுடைய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். அப்துல் றகுமான் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இப்பேரணியில் பலர் கலந்துகொண்டனர்.

ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஊர்வலமாக வந்த மக்கள் செம்மண்ஓடை சாட்டோ மைதானத்தை வந்தடைந்ததுடன், அவர்களினால் கண்டனப் பிரகடனமும் மேற்கொள்ளப்பட்டது. இக்கண்டனப் பிரகடனத்தின் போது, போதைப் பொருள்பாவனையில்ஈடுபடுவோர், அவற்றை விற்பனை செய்யும் நபர்களினுடைய குடும்பங்களின் எந்தவித நன்மை, தீமைகளிலும் ஊர் மக்கள் பங்கெடுப்பதில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

## கந்தளாய் ஆயிஷா மகளிர் பாடசாலையில் 6 பேர் சித்தி

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் கடந்த 2022ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், 6 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாக, அப்பாடசாலையின் அதிபர் எஸ். சாகிதீன் தெரிவித்தார்.

அஸ்மி சைனப் ஆரா 177 புள்ளிகளையும் இன்ஷாப் ஆலிப் 146 புள்ளிகளையும் முஹம்மட் இப்திகார் சுல்பா 144 புள்ளிகளையும் றியாஸ் ரய்யான் அஹம்மட் 143 புள்ளிகளையும் சுக்ரி சனா 145 புள்ளிகளையும் ஏ.டபிள்யூ. ஹம்மாத் 142 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

இம்மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும், அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

## தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெரியகல்லாறில் 18 மாணவிகள் சித்தி

கல்லாறு தினகரன் நிருபர்

மட். பட்டிருப்பு வலய பெரிய கல்லாறு மெதடிஸ்தமிஷன் தமிழ் பெண்கள் பாடசாலையில் கடந்த 2022ஆம் ஆண்டுக்கான தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 18 மாணவிகள் சித்தி பெற்றுள்ளதாக, அப்பாடசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஜே.றித்திகேஷ் மற்றும் எஸ்.விசாலியும் 169 புள்ளிகளையும் கே.லிஷனன் 165 புள்ளிகளையும் ஆர்.கிறிஸ்வின், ஜே.இனியா, கே.ஆன்யாமிஷேல், பி.லத்திக்கா, கே.மிஷாரி ஆகியோர் 158 புள்ளிகளையும் பெற்று முதல் 3 இடங்களிலுள்ளனர்.

தமக்கு அர்ப்பணிப்புடன் கல்வி போதித்த ஆசிரியர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## உளநலப்பிரிவை கீழ்த்தளத்துக்கு மாற்ற நோயாளர்கள் வேண்டுகோள்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்திலுள்ள அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மேல் தளத்தில் இயங்கி வரும் உளநலப் பிரிவை, அவ்வைத்தியசாலையின் கீழ்த் தளத்துக்கு மாற்றுமாறு, நோயாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்திய அத்தியட்சகர் அப்துல் றகுமானிடம், கடும் நோய்களினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு வரும் வயதான நோயாளர்களே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

தமக்கு படியேறி மேல் தளத்துக்குச் செல்வதில் சிரமம் காணப்படுவதாகவும், நோயாளர்கள் தெரிவித்தனர்.

எனவே, தமது நிலைமையை உணர்ந்து உளநலப் பிரிவை கீழ்த் தளத்துக்கு மாற்றுவதற்கு உதவுமாறும், அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சேவை நலன் பாராட்டு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரியில் கடந்த 30 வருடங்களாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் கல்வி சாரா உத்தியோகத்தர் யூ.எல்.எம்.ஹூசைனின் சேவையைப் பாராட்டி சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, யூ.எல்.எம்.ஹூசைனின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், அவருக்கு நினைவுச்சின்னமும் பொற்கிளியும் வழங்கி வைக்கப்பட்டது.



## திருக்கோவில் கல்வி வலயத்தில் 144 மாணவர்கள் சித்தி

வாச்சிக்குடா விசேட நிருபர்

கடந்த 2022ஆம் ஆண்டுக்கான தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய, திருக்கோவில் கல்வி வலயத்தில் 144 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக, அவ்வலய கல்வி அலுவலக தகவல்கள் தெரிவித்தன.

ஆலையடிவேம்பு கோட்டத்தில் 78 மாணவர்களும் திருக்கோவில் கோட்டத்தில் 57 மாணவர்களும் பொத்துவில் கோட்டத்தில் 11 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

வலய மட்டத்தில் அக்கரைப்பற்று விவேகானந்தா வித்தியாலய மாணவன் ராஜவரதன் கதுராஜ் 181 புள்ளிகளை பெற்று வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேநேரம் ஆலையடிவேம்பு கோட்டத்தில் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் 16 மாணவர்களும் அன்னை சாரதா வித்தியாலயத்தில் 16 மாணவர்களும் விவேகானந்தா வித்தியாலயத்தில் 15 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

திருக்கோவில் கல்வி வலயத்தில் திருக்கோவில் குமர வித்தியாலயத்தில் 16 மாணவர்களும் தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்தில் 14 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

இவ்வாறிருக்க, திருக்கோவில் கல்வி வலயத்தில் கடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 133 மாணவர்கள் சித்திடையந்த நிலையில், இம்முறை 144 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை, திருக்கோவில் கல்வி வலயம் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண மட்டத்தில் 3ஆம் நிலையை பெற்றுள்ளதுடன் தேசிய ரீதியில் 37ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்ட செயலக தைப்பொங்கல் விழா







கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் அம்மாவட்ட சமய, சமூக கலாசார ஒன்றியமும் இணைந்து நடத்திய தைப்பொங்கல் விழா, மாவட்ட செயலக முன்றலில் நேற்று முன்தினம் (26) மிகச் சிறப்பாக நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ஆன்மீக அதிதியாக கிழக்கு இலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ லோகநாதன் குருக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இவ்விழாவில் பாரம்பரிய முறைப்படி நெல் குற்றி பொங்கல் பொங்கியதுடன், பாரம்பரிய வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கின்ற பண்பாட்டுக் கலைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதன்போது, சொற்பொழிவுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# தினகரன் வர்த்தக உலா

# நாடு முழுவதிலும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஊடாக 87,000 பயனாளிகளை பலப்படுத்தும் Outreach Projects

*Outreach Projects (Guarantee) Limited*, சமூகப் பராமரிப்பு முயற்சிகள் மூலம் உள்ளூர் சமூகங்களை பலப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற சுயாதீன அமைப்பாகும், இந்த அமைப்பின் ஊடாக 2022 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 87,000க்கும் அதிகமான பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

Outreach Projects அதன் கார்ப்பரேட் சோஷியல் இன்வெஸ்ட்மென்ட் (CSI) திட்டங்களுக்கு இணையாக ஒரு வருடத்தில் 170 திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. நிறுவனத்தின் முதன்மையான CSI திட்டமான, நிலையான வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (SADP), தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் வீட்டுத் தோட்டம் மற்றும் கால்நடை வளர்ப்பு மூலம் தன்னிறைவு அடைய உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் 2022 வரை 33,000க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்துள்ளனர். கம்பளை, வலஸ்முல்ல, வெலிகேபொல, பிலான, பிபிலே, வெலிகம, தலாவ, அகுனுகொலபலஸ்ஸ, தம்புள்ளை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குண்டசாலை ஆகிய பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன்,





இது இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை வழங்க உதவுகிறது.

'சுவ ஜீவன்' திட்டத்தின் மூலம் தொலைதூர பகுதிகளில் வசிக்கும் சமூகங்களுக்கு 9 Reverse Osmosis (RO) நீர் சுத்திகரிப்பு அலகுகளை நிறுவுவதன் மூலம் நாட்டில் நீண்டகால சிறுநீரக நோய்க்கு (CKD) எதிரான போராட்டத்திற்கு Outreach Projects தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

இதன் மூலம் தியவின்ன, வெலிபத்தயாய, அவுகன, அத்தனகத்வெல, நிகபதிய, பக்கமூன, கொட்டபிட்டிய, பதுலுஓயா மற்றும் மெகல்லேவ ஆகிய பகுதிகளில் உள்ள 6,750 குடும்பங்களில் வசிக்கும் 27,000 பேருக்கு வருடம் முழுவதும் சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

# காலி மாவட்டம் முழுவதும் பேபி செரமி பெற்றோர் கிளினிக்



இலங்கையில் முன்னணியிலுள்ள, மிகவும் விரும்பப்படுகின்ற, பாதுகாப்பான குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமான பேபி செரமி (Baby Cheramy), குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் ஆரம்ப குழந்தைப் பருவப் பராமரிப்பின் போது ஏற்படும் சவால்களை சமாளிப்பது குறித்து பெற்றோருக்குக் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, பெற்றோர்களுக்கான கிளினிக் நிகழ்ச்சித் தொடர்களை காலி மாவட்டத்தில் அண்மையில் வெற்றிகரமாக நிறைவு செய்தது. குறித்த காலகட்டமானது பொதுவாக புதிய பெற்றோருக்கு அவர்கள் முன்பு அறியாத ஒரு விடயமாகும். பேபி செரமி போன்ற பாதுகாப்பான, மதிப்பிற்குரிய தகவல் மூலத்திலிருந்து சரிபார்க்கப்பட்ட மற்றும் நம்பகமான தகவல் மூலம், மருத்துவ மற்றும் மகப்பேறு நிபுணர்களுடன் இணைந்து, பெற்றோர்களாகிய இருவருக்கும் வெற்றிகரமான பெற்றோருக்குரிய அனுபவத்திற்கு சிறந்த தொடக்கத்தை பேபி செரமி வழங்குகிறது.

# South Asia Textiles இனால் அறிமுகப்படுத்தப்பட்ட 'MIDNIGHT' இயற்கை சாயத்திற்கு உலகிலும் உள்ளூரிலும் சிறந்த வரவேற்பு



Hayleys Fabric PLCஇன் துணை நிறுவனமான South Asia Textiles (Pvt) Ltd. (SAT), Biomass நிலக்கரி கழிவுகளிலிருந்து பெறப்பட்ட இயற்கையான சாயங்களைக் கொண்ட புத்தாக்கமான ஜவுளி வகைகளான 'Midnight by Charcoal' மூலம் உலகளாவிய மற்றும் உள்ளூர் பேஷன் துறையில் பெரும் எழுச்சியை உருவாக்குகிறது.

உலகின் மிகவும் புத்தாக்கமான, நிலையான, உயர்செயல்திறன் கொண்ட துணிகளைக் கண்டறிந்து காட்சிப்படுத்துவதற்கான முன்னணி ஜெர்மன் தளமான ISPO Munichஇல், Street Sports பிரிவில் சிறந்த 10 புத்தாக்கங்கள் பிரிவில் இடம் பிடித்த பின்னர், SAT இன் 'MIDNIGHT' ரேஞ்ச் புதிய சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றது.

கடந்த ஆண்டில் இது இரண்டாவது தடவையாக இலங்கையின் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஜவுளி சாயங்களில் சிறந்த புத்தாக்கமான ISPO மற்றும் Hayleys Fabric குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

உள்நாட்டில், 'MIDNIGHT' புத்தாக்கம், சமீபத்தில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட Best Corporate Citizen Sustainability Awards 2022 (BCCSA) விருது வழங்கும் நிகழ்வில், சிறந்த திட்டங்களின் நிலைத்தன்மை விருதை வென்றது.

"Hayleys Fabric மற்றும் South Asian Textilesஇல் உள்ள ஒட்டுமொத்த குழுவும் எங்கள் Fabric சாயமான 'MIDNIGHT by Charcoal' அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கிடைத்த நேர்மறையான பிரதிபலிப்புகளால் கௌரவிக்கப்படுகிறது.

# TAGS விருதுகள் 2022 இல் தங்க விருதை வென்ற ஜனசக்தி லைஃப்




இலங்கையிலுள்ள முன்னோடியான ஆயுள் காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி லைஃப் (Janashakthi Life), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (Chartered Accountants Sri Lanka) ஏற்பாடு செய்திருந்த CA Sri Lanka's TAGS விருதுகள் 2022 இல் காப்புறுதிப் பிரிவில் உயரிய தங்க விருதை வென்றுள்ளது.

இந்தச் சாதனை குறித்து ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி லியனகே கருத்துத் தெரிவிக்கையில், "மதிப்புமிக்க CA Sri Lanka's TAGS விருதுகள் விழாவில் கௌரவிக்கப்பட்டதையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

காப்புறுதித் துறையில், சந்தையில் சவால் விடுக்கும் விருது பெற்ற நிறுவனம் எனும் வகையில் எமது நிறுவன நிலைப்பாட்டை இந்த விருது மேலும் வலுப்படுத்துகிறது.

ஜனசக்தி லைஃப் இனை பிரதிநிதித்துவப்படுத்தும் வலுவான கொள்கைகள், வெளிப்படைத்தன்மை, நிர்வாகம், விழுமியங்கள் ஆகியவற்றுக்கு இந்த சாதனை ஒரு சான்றாகும்.

எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் பொருத்தமான, துல்லியமான மற்றும் தகவல் நிறைந்த வருடாந்த அறிக்கையை வழங்குவதன் மூலம், நாம் தொடர்ச்சியாக சிறந்து விளங்க முயற்சிப்பதன் அடிப்படையில், இது எமது குழுவின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கான அங்கீகாரம் என்பதால், எமது குழுவிற்கு இவ்வேளையில் நான் வாழ்த்துகளை தெரிவிக்க விரும்புகிறேன்." என்றார்.

வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் கனவுகளை வலுப்படுத்துதல் ஆகிய தனது கூட்டாண்மை நோக்கத்திற்கு உண்மையாக இருந்து, ஜனசக்தி லைஃப் அதன் அனைத்து பங்குதாரர்களுக்கும் நெறிமுறை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் அதிக மதிப்பை வழங்க எப்போதும் பாடுபடுகிறது.



# செலிங்கோ லைஃப் மீண்டும் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக தெரிவு

இலங்கையின் முன்னோடி வணிக இதழான எல்.எம்.டி ஆல் பல வணிகத் துறைகளில் சேவைகளில் வாடிக்கையாளர்களின் திருப்தி அளவைக் கண்டறிய நடத்தப்பட்ட இணையவழி மதிப்பாய்வில் இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் செலிங்கோ லைஃப் சிறந்த சேவைக்கான உயர் நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

22 வகையான சேவை நிறுவனங்களில் 2,800 க்கும் மேற்பட்ட பதில்களைப் பெற்ற இந்தக் மதிப்பாய்வில், ஆயுள் காப்புறுதித் துறையில் முன்னணியாளராய் விளங்கும் செலிங்கோ லைஃப் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வாடிக்கையாளர் சேவைக்கான மிகவும் பிரபலமான நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

செலிங்கோ லைஃப் அதன் பிரிவில் முதலிடத்தைப் பெற்றமை குறித்து கருத்து தெரிவித்த செலிங்கோ லைஃப் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் திரு சமித்த ஹேமச்சந்திர:

"செலிங்கோ லைஃப் தனது வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட கவனிப்பை வழங்குவதற்கு கூடுதல் மைல் செல்கிறது.

அதனால்தான், தொற்றுநோயால் ஏற்படும் இடையூறுகளை எதிர்கொள்ள, நிறுவனம் தனது வாடிக்கையாளர் சேவைகளை டிஜிட்டல் தளங்களாக மாற்றியது.

மேலும் வாடிக்கையாளர் அனுபவத்தின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த மற்ற பல தொடுபுள்ளிகளுடன் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகள் போன்ற பிற மதிப்புச் சேர்த்தல்கள், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் காப்புறுதி ஒப்பந்தங்களைப் பராமரிப்பதற்கு வாழ்க்கையை எளிதாக்குவது, வாடிக்கையாளர்களுக்குள் நடத்தப்பட்ட சிறப்பான ஆய்வில் நிறுவனத்தை சிறந்த ஆயுள் காப்புறுதி வழங்குநராக நிலைநிறுத்தியுள்ளது.

# 4ஆவது வருடமாகவும் முதல் நிலையை பெற்ற செலான் வங்கி



இலங்கையில் வங்கியியல் மற்றும் நிதிச் சேவைகளில், சேவைத் தரத்தில் சிறந்த ஸ்தானத்தைக் கொண்டிருக்கும் அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, தனது நிலையை மேலும் உறுதி செய்யும் வகையில், LMD இன் வாடிக்கையாளர் சிறப்பு கருத்துக் கணிப்பில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் முதல் நிலையில் தரப்படுத்தப்பட்டிருந்தது.

வங்கியின் 34 வருட கால செயற்பாடுகளில் வாடிக்கையாளர் சேவையில் காண்பிக்கப்பட்டு வரும் கரிசனைக்கு எடுத்துக் காட்டாக இந்த சாதனை அமைந்துள்ளது. கடந்த காலங்களில், அன்புடன் அரவணைக்கும் வங்கி எனும் தனது தொனிப்பொருளுக்கமைவாக, வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொண்டு, அவர்களுக்கு பொருத்தமான நிதித் தீர்வுகளை வழங்கிய வண்ணமுள்ளது.


இந்த மைற்கல் சாதனை தொடர்பில் செலான் வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில், "வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சகல தீர்வுகளும், ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியானவையாக காணப்படும் நிலையில், வங்கித் தீர்வுகளைப் பொறுத்தமட்டில் சேவை என்பது பிரதான மாறுபடுத்தும் காரணியாக அமைந்துள்ளது. செலான் வங்கியில், வாடிக்கையாளருக்கு முன்னுரிமை எனும் கொள்கையின் பிரகாரம், ஒவ்வொரு ஊழியரும் செயலாற்றுவதுடன், எமது DNA இல் ஒரு அங்கமாக இது அமைந்துள்ளது. வாடிக்கையாளர் சேவைக்காக நாம் காண்பிக்கும் முயற்சிகளுக்கு, தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாகவும், ஒவ்வொரு ஆண்டிலும் கௌரவிப்பைப் பெற்றுக் கொள்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்." என்றார்.

# SLIM Brand Excellence Awards 2022 இல் Diva Powerக்குப் பாராட்டு

அண்மையில் இடம்பெற்ற SLIM Brand Excellence Awards 2022 இல், முன்னணி வீட்டுப்பாவனை சலவை வர்த்தக நாமமான Diva இவ்வருடத்தின் சிறந்த புதிய வரவு சின்னத்திற்கான வெண்கல விருதை தட்டிச் சென்றது. இலங்கையில் உள்ள பிரபல வர்த்தகநாமங்களின் வலுவான போட்டிக்கு மத்தியில் Diva Power இந்த விருதை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2020 இல் ஆரம்பிக்கப்பட்ட Diva Power வர்த்தகநாமத்தினால், நாட்டின் சலவைத் துறையில் மிக விரைவாக புரட்சியை ஏற்படுத்தவும் இலங்கையர்களின் இதயங்களை வெல்லவும் முடிந்துள்ளது. Diva Power, கட்டுப்படியாகும் விலையிலான சலவைத் தயாரிப்பாக இருக்கும் அதே வேளையில், ஆடைகளுக்கு பாதுகாப்பு மற்றும் சிறந்த சுத்தத்தை வழங்குவதில் புகழ்பெற்றுள்ளது. கிருமிகளிலிருந்து 99.9% பாதுகாப்பை வழங்கும் Diva Power Germ Guard மற்றும் நிறம் மங்குவதைத் தடுப்பதன் மூலம் ஆடைகளைப் பாதுகாக்கும் Diva Power Colour Guard ஆகிய இரண்டு வகைகளில் Diva Power கிடைக்கிறது. .

இவ்விருது வென்றமை தொடர்பில், Hemas Consumer Brands நிறுவனத்தின் வீட்டு பராமரிப்பு பிரிவின் தலைவி ,அனுஷ்கா சபாநாயகம் கருத்துத் தெரிவிக்கையில், "அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டே வருடங்களில் Diva Power அதன் முன்னேற்றத்தைப் பறைசாற்றும் இந்த அங்கீகாரம் தொடர்பில் நாம் பெருமையடைகிறோம். சந்தையில் ஒரு இளம் வர்த்தகநாமமாக இருப்பதனால், மிக உயர்ந்த மட்டத்தில் உள்ள வர்த்தகநாமங்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளமையானது ஒரு பெரிய சாதனையாகும். இவ்விருதானது, Diva வர்த்தகநாமத்தையும், அவ்வர்த்தகநாமத்துடன் கூடியுள்ள விசுவாசமான நுகர்வோருக்கும் உயர்தர சலவை தீர்வுகளை வழங்குவதற்கான அதன் முயற்சிகளையும் மேலும் வலுவடையச் செய்கிறது." என்றார்.











செலான் வங்கியின் வருடாந்த தைப்பொங்கல் கொண்டாட்டம் இம்முறையும் வெகு விமரிசையாக கொழும்பிலுள்ள வங்கியின் தலையகத்தில் இடம்பெற்றது. செலான் வங்கியின் தலைவர் ரவி டயஸ், பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன மற்றும் பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். செலான் வங்கியின் ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் தைப் பொங்கல் விழாவில் பங்கேற்றிருந்தனர்.

# இங்கிலாந்து லயன்ஸ் அணியை வீழ்த்தியது இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர்கள்



இங்கிலாந்து லயன்ஸ் அணியுடனான மூன்று நாள் பயிற்சிப்போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொவர் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற போட்டியின் இறுதி நாளான நேற்று (27) கிரிக்கெட் சபை அணிக்கு 309 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய கிரிக்கெட் சபை அணிக்கு ஆரம்ப வீரர் லசித் க்ரூஸ்புள்ளே அதிரடி சதம் ஒன்றை பெற்றார். 84 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 15 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் 116 ஓட்டங்களை பெற்றார்.

மத்திய வரிசையில் பசிந்து சூரியபண்டார அரைச்சதம் ஒன்றை பெற்றதன் மூலம் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 309 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து லயன்ஸ் அணி முதல் இன்னிங்ஸுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து 413 ஓட்டங்களை பெற்றது. தொடர்ந்து கிரிக்கெட் சபை அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 355 ஓட்டங்களை குவித்தது. இதன்போது நிஷான் மதுஷங்க 150 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டதோடு லஹிரு உதார 93 ஓட்டங்களை பெற்றார்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து லயன்ஸ் அணியை 250 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த முடிந்தது.

இதன்போது கிரிக்கெட் சபை பதினொருவர் அணி சார்பில் இசித்த விஜேசுந்தர, சஹன் ஆரச்சிகே மற்றும் நிமேஷ் விமுக்தி தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

அடுத்து இங்கிலாந்து லயன்ஸ் அணி இலங்கை ஏ அணியுடன் இரண்டு உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

## கராத்தே புதிய விதிகள் தொடர்பில் கருத்தரங்கு

***கல்முனை மத்திய தினகரன் நிருபர்***



உலக கராத்தே சம்மேளனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான புதிய தொழிநுட்பம் மற்றும் போட்டி விதிமுறைகள் பற்றிய கருத்தரங்கு (22) சம்மாந்துறை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இலங்கை கராத்தே கிழக்கு மாகாண சம்மேளனத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் முஹம்மது இக்பால் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட கராத்தே போதனாசிரியர்கள், நடுவர்கள், மத்தியஸ்தர்கள், புதிய நடுவர் மற்றும் மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கறுப்புப்பட்டி மாணவர்கள் மாத்திரம் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதியாகவும் வளவாளராகவும் தென்னாசிய கராத்தே சம்மேளனத்தின் நடுவர் குழாமின் தவிசாளர் ஷிஹான் ஆர்.ஜே. அலெக்ஸாண்டர் கலந்து கொண்டு 2023ஆம் ஆண்டுக்காக உலக கராத்தே சம்மேளனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழிநுட்பம் மற்றும் போட்டி விதிமுறைகள் பற்றிய தெளிவான விளக்கங்களை வழங்கினார்.

## இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவுக்கு மீண்டும் பெயர்களைக் கோரும் வாய்ப்பு



தற்போது வெற்றிடமாக இருக்கும் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவுக்கு இலங்கை கிரிக்கெட் சபையால் அனுப்பப்பட்ட பரிந்துரையை தேசிய விளையாட்டு தேர்வுக் குழு நிராகரித்திருக்கும் நிலையில் தேர்வுக் குழுவுக்கு மீண்டும் பரிந்துரைகளை அனுப்பும்படி தேசிய விளையாட்டுத் தேர்வுக் குழுவினால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இதன்படி பாதுகாப்பு படைகளின் பிரதான அதிகாரி சவேந்திர சில்வா தலைமையிலான தேசிய விளையாட்டு தேர்வுக் குழுவால் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவு பற்றி விளையாட்டு அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவுக்கு இதனை விடவும் சிறந்த அபேட்சகர்கள் இருப்பதால் அவர்களை உள்ளடக்கிய பெயர் பட்டியல் ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கிரிக்கெட் தேர்வுக் குழுவின் பதவிக் காலம் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்ததால் கிரிக்கெட் சபையினால் விளையாட்டுத் துறை அமைச்சரின் ஒப்புதலைக் கோரி 10 பேர் கொண்ட பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது.

இதில் இலங்கை கிரிக்கெட் சபையால் அனுப்பப்பட்டிருக்கும் பெயர் பட்டியலில் தேர்வுக் குழுவின் முன்னாள் அங்கத்தவர்களான பிரமோத்ய விக்ரமசிங்க, ஹேமந்த விக்ரமரத்ன, ருமேஷ் களுவிதாரண, ஊவைஸ் கர்னைன், வருண வராகொட, ரஞ்சித் மதுசிங் உள்ளடங்குகின்றனர்.

அதேபோன்று இந்தப் பரிந்துரையில் காமினி விக்ரமசிங்க, வினோதன் ஜோன், சாந்த கலவிட்டிகொட மற்றும் ஹேமந்த தேவப்பிரிய ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் தேசிய விளையாட்டு தேர்வுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுக்கு விளையாட்டு அமைச்சரின் ஒப்புதல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

எனினும் இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தப்படவில்லை என்று இலங்கை கிரிக்கெட் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

“இது தொடர்பில் எவரும் எமக்கு இதுவரை அறிவுறுத்தவில்லை. நாமும் இது பற்றி ஊடகங்களில் தான் தெரிந்துகொண்டோம். பொறுப்பான தரப்புகள் எம்மை அறிவூட்டினால் அது பற்றி முடிவொன்றை எடுப்போம்” என்றும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஆஷ்லி டி சில்வா குறிப்பிட்டார்.

## விளையாட்டு ஊடகவியலாளர் சங்கத்தின் புதிய தலைவராக ராமகிருஷ்ணன் தெரிவு



இலங்கை தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராக மீண்டும் கருப்பையா ராமகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 21ஆம் திகதி கொழும்பு கோல்ட்ஸ் கழக மதிவாணன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கை தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர் சங்கத்தின் புதிய தலைவராக மீண்டும் லயன்நேஷன் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க்கின் நிர்வாக இயக்குநர் கருப்பையா ராமகிருஷ்ணன் தெரிவாகினார்.

இதனிடையே, இலங்கை தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர் சங்கத்தின் பொருளாளராக கடந்த 5 ஆண்டுகளாக செயல்பட்ட லங்காதீப பத்திரிகையின் யொஹான் பாசுர புதிய செயலாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் பொருளாளராக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சம்பத் பெரேரா நியமிக்கப்பட்டுள்ள

அதேவேளை, திபபரே ஊடகவியலாளர் சுதர்ஷன பீரிஸ் சங்கத்தின் தேசிய அமைப்பாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

வீரகேசரி பத்திரிகையின் நெவில் அந்தனி, தெரண தொலைக்காட்சியின் கசுன் கெலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஜயசாந்த பெரேரா மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சுசந்தி பிரேமசந்திர ஆகிய நால்வரும் சங்கத்தின் உப தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

2017இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர் சங்கம் இலங்கையில் தற்போது செயல்பட்டு வருகின்ற ஊடகவியலாளர்களின் மிகப்பெரிய சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ண இறுதியில் இலங்கை பெண் மத்தியஸ்தர்




19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான டி20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் மத்தியஸ்தராக முன்னாள் இலங்கை அணித் தலைவி வனெசா டி சில்வா செயற்படவுள்ளார்.

இதன்படி உலகக் கிண்ண இறுதிப் போட்டி ஒன்றில் மத்தியஸ்தராக செயற்படும் முதல் இலங்கை பெண்ணாக அவர் பதிவாகவுள்ளார். இளையோர் மகளிர் டி20 இறுதிப் போட்டி நாளை தென்னாபிரிக்காவின் பெட்சப்ஸ்ட்ரூமில் நடைபெறவுள்ளது.

1999 ஆம் ஆண்டு இலங்கை மகளிர் அணி முதல் ஒருநாள் சர்வதேச போட்டியில் ஆடியபோது அணித் தலைவியாக செயற்பட்ட வனெசா டி சில்வா இலங்கை மகளிர் அணியில் முதல் தலைவியாகவும் சாதனை படைத்தவராவார்.

ஒரு டெஸ்ட் மற்றும் 13 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் வனெசா 7 போட்டிகளில் இலங்கை அணித் தலைவியாக செயற்பட்டுள்ளார். அதில் இரு போட்டிகளில் இலங்கை அணி வெற்றியீட்டியுள்ளது.

## கடைசி கிராண்ட்ஸ்லாமில் சானியா மிர்ஸா தோல்வி




இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தனது கடைசி கிரண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபனின் கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்தார்.

இந்தியாவின் சிறந்த டென்னிஸ் வீராங்கனையான 36 வயது மிர்சா அவுஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு திரும்பிய நிலையில் நேற்று (27) கடைசி முறையான பட்டத்தை வெல்ல இறுதிப் போட்டியில் ஆடினார்.

எனினும் சானியா மற்றும் அவரது கலப்பு ஜோடியான 42 வயது ரொஹான் போபன்னா இறுதிப் போட்டியில் பிரேசில் ஜோடியான லுவிசா ஸ்டபானி மற்றும் ரபாயேல் மாடோவிடம் 7–6, 6–2 என்று செட் கணக்கில் தோல்வியை சந்தித்தனர். போட்டிக்குப் பின்னரான பரிசளிப்பு நிகழ்வில் மிர்சா கண்ணீர் மல்க காட்சி அளித்தார்.

மிர்சா தனது 18 வயதிலேயே மெல்போர்னில் முதல் முறை கிராண்ட்ஸ்லாம் போட்டி ஒன்றில் கலந்து கொண்டார். அதில் அவர் மூன்றாவது சுற்றில் முன்னணி வீராங்கனை சரீனா வில்லியம்ஸை தோற்கடித்தார்.

2005 ஆம் ஆண்டு தனது சொந்த ஊரான ஹைதராபத்தில் டபிள்யூ.டீ.ஏ ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் இந்தியப் பெண்ணாக சானியா பதிவானார். அதே ஆண்டு அவர் அமெரிக்க ஓபனில் 4ஆவது சுற்றுவரை முன்னேறி உலகின் 30 முன்னணி வீராங்கனைகளில் ஒருவராக பதிவானார்.

## ரொனால்டோ அணிக்கு தோல்வி



கிறிஸ்டியானோ ரொனால்டோவின் அல் நாசர் அணி சவூதி சுப்பர் கிண்ணப் போட்டியின் அரையிறுதிச் சுற்றில் தோல்வி கண்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை (26) நடந்த ஆட்டத்தில் அல் இத்திஹாத் 3–1 எனும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. இதன்போது கோல் அடிக்கப் பல வாய்ப்புகள் கிடைத்தும் அதனை நழுவவிட்டார் ரொனால்டோ. அல் நாசரின் அண்டர்சன் தாலிஸ்கா 67ஆவது நிமிடத்தில் அடித்த கோல் அணிக்குப் போதுமானதாக அமையவில்லை.

ஆட்டம் ஆரம்பித்து 15ஆவது நிமிடத்திலேயே அல் இத்திஹாத் அணியின் ரோமரின் ஹோ கோல் அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தார். அதேபோல் ஆட்டத்தின் 43ஆவது நிமிடத்தில் அல் இத்திஹாத் அணி 2ஆவது கோலை பதிவு செய்தது.

ரொனால்டோ நாசர் அணிக்கு இன்னும் கோல் பெறவில்லை. அவர் மான்செஸ்டர் யுனைடட் அணியில் இருந்து விலகியதை அடுத்து கடந்த டிசம்பரில் அல் நாசர் அணிக்கு ஒப்பந்தமானார். இந்தத் தோல்வி மூலம் சவூதி சுப்பர் கிண்ணத் தொடரில் இருந்து அல் நாசர் அணி வெளியேறியுள்ளது. நாளை (29) நடைபெறும் இறுதிப் போட்டியில் அல் இத்திஹாத் மற்றும் அல் ஃபைஹா அணிகள் சந்திக்கின்றன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 28ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இந்திய குடியரசு தின நிகழ்வில் இலங்கைத் தலைவர்கள்























படங்கள்: சுலோச்சன கமகே












தினகரன் வாரமஞ்சரி

ஊடக அனுசரணையில்...

## புதிய அலை கலை வட்டம்

வருடாந்தம் நடத்தும்

கலாசார போட்டிகளுக்கான பரிசளிப்பும்
கலாமித்ரா விருது வழங்கும் விழாவும்

2023.01.29
மாலை 4.00 மணிக்கு
கொழும்பு 10, தாமரை
கோபுரத்திற்கு அருகில்
தபால் அமைச்சின்
கேட்போர் கூடத்தில்



பிரதம அதிதி
புரவலர் ஹாசிம் உமர்



கலைஞர்கள், கவிஞர்கள், இலக்கிய வாதிகள், ஊடகவியலாளர்கள், புதிய அலை கலை வட்டத்தின் சகல அங்கத் தவர்களுக்கும் நிர்வாகத்தின் அழைப்பு

கலைஞர் ராதா மேத்தா
ஸ்தாபகர், புதிய அலை கலை வட்டம்

# வாழும் வரைநாம் வாழ்த்துவோம்



கண்கள் குளிர காட்சிதரும்
கடல் சூழ்ந்திட்ட தீவாமெம்
கிண்ணியாவில் பிறந்திந்த
மண்ணின் மகிமை உணர்த்திட்ட
நண்பர் ஏ.எம். கஸ்புள்ளாவின்
அன்பும் இனிய அனுசரிப்பும்
என்றும் எங்கள் கழகத்தை
வந்துசேர வாழ்த்துகிறோம்....

இளமை துள்ளும் பருவத்தில்
எமது அல் புரூஜ் விளையாட்டுக்
கழகம் தன்னில் உறுப்பினராய்
இணைந்து நின்று பணியாற்றி
சளைத்திடாது பல்வேறு
சாதனைகள் புரிந்து நல்ல
நிலையை வாழ்வில் அடைந்திட்ட
உம்மை நாமும் வாழ்த்துகிறோம்

உள்ளம் உவக்கும் விளையாட்டுத்
துறையில் மட்டும் நில்லாது
கல்வி,கலை,கலாசாரம்
நிகழ்வு தன்னை அரங்கேற்றி
எல்லை இல்லா சாதனைகள்
ஈட்டி நிற்கும் எம் கழகம்
உள்ள மட்டும் உம் பெயரை
உச்சரிக்க மறவாதே

நீண்டு செல்லும் வரலாற்றின்
முகவுரையில் உம் பெயரும்
தோன்ற வேண்டும் உம் பணியும்
தொடர வேண்டும்....பலதேசம்
தாண்டி நீங்கள் சென்றாலும்
தொடரும் இந்தப் பதினாறு
ஆண்டு கால பணி தொடர
உழைத்த உம்மை வாழ்த்துகிறோம்!

பா.கவிஞர் எம்.வை.அலி
(வாழ்த்துவது அல்புரூஜ்
விளையாட்டுக் கழகம் கிண்ணியா)

# எங்களை வாழவிடுங்கள்...!



சின்ன விதையாய்
சிரித்து மகிழ்ந்தோம்

புதைகுழியில் எங்களைப்
புதைத்து மகிழ்ந்தீர்கள்

பூமியைக் கிழித்து
முளையாய் எழுந்தோம்

நாங்கள் வளருமுன்னே
விலையும் பேசினீர்கள்

பொறுத்துக் கொண்டே
கடமையைச் செய்தோம்

காலநிலையைச் சீராக்கினோம்
காலத்திற்கும் உதவியானோம்

பறவைகளுக்குப் புகலிடமானோம்
விலங்குகளுக்கும்
ஆறுதலானோம்

வழிவிடுங்கள் மனிதர்களே
எங்களை வாழவிடுங்கள்..!

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்.
ஏறாவூர்.

புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்

# உயர்வாகும் வாழ்க்கை

நிலவோடுல விடுவோமென நினைத்தாரெவ ருண்டு?
நினைவோடதை முயன்றேவிட நிசமானது இன்று
மலரோடுற வுறலேதரும் மதுபோதையை யென்று
மனதோடொரு நினைவேவரின் மறுத்தேவிடு நன்று
புலராதுள பொழுதேயிலை புரிந்தேயுகம் வென்று
புதுப்பாதையில் நடப்பாயெனில் புகழ்மாலைக ளுண்டு
உலகோபல ருருவாக்கிய உயர்வானவை கொண்டு
உழலாவிடி லெதுவாமுனக் கெனவேபொரு ளுண்டு?

முயலாமையு முடவாதமு மொருமாதிரி ஊனம்
முயலாமையைத் தொலைத்தேவிட முடிவாயுறு ஞானம்
இயலாமையி லிளைப்பாறிட இதமாயிடு தானம்
இலையேலது கரமேந்திடத் தரலாமொரு ஏனம்
அயலானொடு உறவாயிரு அதுவேகுளிர் பானம்
அதைப்பார்த்திடப் புளகாங்கித மடைந்தேயழும் வானம்
நயமாயுரை நலமேநினை நமக்காயுள மானம்
நமதாருயி ரெனவானவ ருடனேவர வேணும்.

அவமானமு மிழிவாதலு மருகேயுளத் தீயே!
அவதானமு மிலையேலெனி
லதிலேவிழு வாயே!
உவமானமு முவமேயமு மொருங்கேயுள போதும்
உதவாதென வறியாதவ ரையுமேவிடு நீயே!
தவறாயினும் சரியேயென தகராறுறு வோரைத்
தவறாதுன தருகேவிடத் தவறாகிடு மேயே!
சுவராகிலும் மனதோடுள சுயவேதனைக் கூறச்
சுகமாயதில் குளிர்காய்ந்திட வழியேசமைக் காதே!

வரமாயிலைத் தவமாவென வழக்காடுதல் விட்டு
வரமேயென உறவாடிடு வரலாறுக ளுண்டு
தரமாயிலைக் குறையாவெனத் தடுமாறுதல் தள்ளித்
தரமாயுனை உருவாக்கிட தகராறுக ளில்லை
மரமாயிர வுனையேயவன் படைத்தானென வெண்ணி
மலைபோலவு மசையாதிர மரியாதையு மில்லை
உரமேயுற உருவாகிய உனையேவர வேற்கும்
ஒருவேட்கையை உயிரோடிணை உயர்வாகிடும் வாழ்க்கை.

மெய்யன் நடராஜ்.

# என் உம்மா



மண்ணறைக்குள் உங்களை வைத்து
மண்போட்டு மூடிய போது
கண்களில் நீர் வடிந்து
கரைந்தது மண்குவியல் உம்மா.

கருவறைக்குள் என்னைவைத்து
கவனமாய் பணிகள் செய்து
உருப்பெற இறைவனிடம் வேண்டி
உயர்வாக என்னைப்பெற்றீர்கள் உம்மா.

உதிரத்தால் உணவு ஊட்டி
உண்மை அன்பால் தாலாட்டி
பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து
பத்திரமாய் வளர்த்தீர்கள் உம்மா.

ஆண்டுகள் அறுபத் தைந்து
அவனியில் நான் வாழ
வேண்டுதல்கள் பல செய்து
என்னை வாழவைத்தீர்கள் உம்மா.

தன்னை அழித்து தினம்
என்னை வளர்த்து நல்ல
பிள்ளையாய் நான் வாழ
வழிசெய்தீர்கள் அன்பு உம்மா.

வறுமையிலும் சிதைந்து விடாமல்
தினம் பொறுமை காத்து
மறுமை வாழ்வுக்காய் தொழுது
மண்ணறைக்கு நன்மைசேர்த்தீர்கள் உம்மா.

மண்ணறைக்குள் நீங்கள் நல்ல
மகிமையுடன் வாழ்ந்து மறுமையில்
சொர்க்கத்தில் இடம் பிடிக்க
இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன் உம்மா.

கலாபூணம் பி.எம்.எம்.ஏ.காதர்

எனது தாயின் மறைவின்
ஓராண்டு நிறைவையொட்டி
எழுதப்பட்ட கவிதை இது.

# உறங்காத விழிகள்



உனைக் காணாத நாளெதுவும் அமாவாசைதான்!
என் நினைவெல்லாம் உன்னழகு பாசைதான்!

விழிகளிரண்டும் உன்னசைவைத் தேடியே இசைகின்றன!
அதனால் உறங்காமல் எந்நாளும் அசைகின்றன!

காதல் கொண்ட மனசு அழகுதான்!
அதற்காய் சாதல் கூடத் தூசுதான்!

வசைபாடும் உள்ளங்கள் புகழ் பாடுவதில்லை!
நல்லார் அன்பு கண்டு குதூகளிப்பதுமில்லை!

மனதில் கயமைகொள்வார் விழிகள் உறங்குவதில்லை!
அயலார் காதல் கண்டு மகிழ்வதுமில்லை!

ஜவ்ஹர்
கிண்ணியா

# தொ(ல்)லைபேசி




ஏக்கங்களை தேக்கி எத்தி வைக்கும்.
எல்லை இன்றிய ஏவலுக்கும் எதிரொளிக்கும்.
சுற்றியுள்ள சுரங்கங்களிலும் சுவாசிக்க முயலும்.
சுதந்திரமாய் உலகம் சுற்றி உலாவிடும்.

தொலைதூரக் காதலுக்கும் சில சமயங்களில்
தொல்லை தொடுத்து தொலைந்து செல்லும்.
தேடலும் கூடலும் தேவை அறியாமல்
தொல்லைபேசியாய் சற்று சளித்தும் செல்லும்

அன்ஷியா
கிண்ணியா

# விடுகதை அல்ல அவள் விடுதலை



உன் குடும்பத்தைக் காப்பாற்ற
கணவன் இல்லை
நபிகள் வாழ்வு கொடுக்கச் சொன்னார்
இவர்கள் மனதைப் புண்படுத்தி
மரணம் அடையச் செய்து விடுவர்
கடைக்குச் சென்றால்
கடைக்காரர் முகம் சுழிப்பார்
வலீமா வீட்டுக்கு அழைப்பு இல்லை

விதவையே பிள்ளைகளோடு வாழ்க்கை எனும்
போராட்ட வேதனையை
உதறித் தள்ளிவிட்டு
தைரியமாக வீறுநடை போடு
இறைவன் துணை உனக்கு

உனது பிள்ளைகளுக்கு
நீ ஊற்று கல்வி எனும் பாலை
உனக்கும் விடியல் வரும்
உனது மகன் வைத்தியனாகி விட்டால்
அந்த நிலையை உன்மகன் அடைய
நீ பட்ட துயர் எல்லாம் மாறி
சமூகம் தேடி உன் வீடு வரும்
உனது முகவரி எல்லோருக்கும்
நன்கு தெரியும்

சலீமா
வாழைச்சேனை

# கருப்பன் என்றுதான் அழைக்கிறார்கள்



ஒவ்வொரு இரவிலும்
இப்படித்தான்

எனது நிரத்தைத் திருடி
உடுத்திக்கொள்கிறது வானம்

வளமை போலவே இன்றும்
நிரத்தைப் பற்றிக்கொள்ளத்தான்
வந்தது

ஒரு கையில் துடுப்பும்
மறு கையில் வலையோடும்
என்னையும், என் வாழ்க்கையையும்
ஓட்டம் காட்டும்
மீனைப் பிடிக்க எத்தனித்துக் கொண்டிருக்கிறேன்

துடுப்பால் அடித்துப் பிடித்து
தன்னையும் விற்றிடுவானோ யென
எண்ணிற்று போல
அச்சத்தில் அருகில் வரவில்லை
நேரம் வரும்வரை காத்திருந்தது

பெறும் போராட்டத்திற்கு மத்தியில்
இரண்டு கிலோ செல்வனும்
இருபது கிலோ பாசித்திரள்களையும்
பிடித்துவிட்டேன்
பாசித்திரள் வாங்க
எந்த வியாபாரியும் வரப்போவதில்லை
ஆதலால்

மீனை மாத்திரம் பதப்படுத்திவிட்டு
களைப்பில் கலப்போரத்திலேயே படுத்துறங்கிட்டேன்

வழமைபோல் இன்றும்
எனது நிறத்தைப் பற்றிக்கொண்டது
வானம்

விடிந்ததும்
அது சட்டையை மாற்றிக்கொண்டது
இன்றைக்கும் என்னை
கருப்பன் என்றுதான் அழைக்கிறார்கள்!

பொத்துவில்
இஸ்மட்.